இந்து நாகரிகத்தில்

வேதங்கள்

A/L, G. A. Q, B. A. மாணவர்களுக்குரிய நூல்

சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்

கல்வியே கருந்தனம்

வேதங்கள்

அன்னபூர்ணே ஸதாபூர்ணே சங்கரப்ராண வல்லபே!
ஞான வைராக்ய ஸித்யர்த்தம் பிக்ஷாம் தேஹி
ச பார்வதி !!

வேதாரணியம் குருக்கள் பரம்பரையைச்
சேர்ந்த

சிவஸ்ரீ. தியாகராஜக் குருக்கள்

அவர்களின் மகன்

சிவஸ்ரீ. சோமாஸ்கந்தராஜக் குருக்கள்

(B. A. Cey)

(நெல்லண்டை ப. அ. கோ. பிரதமகுரு)

அவர்களால் தொகுக்கப்பட்டது

நெல்லண்டையர் வெளியீடு
இல 05
1992

அமரத்துவம் அடைந்த அன்னை நல்லாள்

திருமதி. சோமசுந்தர ஐயர் சிவகெங்கை அம்மா

நினைவு வெளியீடு

நூலின் பெயர் : வேதங்கள்

ஆசிரியர் : சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜக் குருக்கள் B. A.

முகவரி ; நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் பிரதமகுரு, தும்பளை, பருத்தித்துறை, இலங்கை.

மொழி : தமிழ்

பதிப்பு : முதலாம் பதிப்பு

ஆண்டு ; தை 1992

உரிமை : நூலாசிரியர்

நினைவுக்குரியவர்; ஸ்ரீமதி சிவகெங்கை அம்மா

வெளியீடு · நெல்லண்டையான் வெளியீடு

வெளியீட்டு இல : 05

அச்சகம் :ஸ்டான்கார்ட் பிரின்டர்ஸ் லிமிடெட்

விலை :

நூலின் உள்ளுரை

	பக்கம்
அருள் ஆசியுரை	1
ஆசியுரை	2
வாழ்த்துச் செய்தி I, II	3, 4
உண்மையுரை	5
மதிப்புரை	7
அணிந்துரை	9
முகவுரை	11
இயல் ஒன்று வேதங்கள்	15
இயல் இரண்டு இருக்குவேதம்	19
இயல் மூன்று இருக்கு வேதத்தில் வணக்கப்பட்ட தெய்வங்கள்	24
இயல் நான்கு இருக்கு வேத பொதுவான அம்சங்கள்	33
இயல் ஐந்து இருக்கு வேத கால சமய நிலை	34
இயல் ஆறு இயசூா வேதம்	40
இயல் ஏழு சாமவேதம்	44
இயல் எட்டு அதர்வண வேதம்	46
இயல் ஒன்பது வேதங்களின் பெருமை	49
இந்நூல் ஆக்க உதவிய நூல்கள்	

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

கிரியாவித்தகர், குருமணி, விநாயக பூஜாதுரந்தரர்
சிவாகம கிரியாரத்தினம்
இந்துமதகுரு, சமயப் பிரசாரகர், புராணிகர்

சிவஸ்ரீ கந்த. சிவபாத சுந்தரக் குருக்கள்

வழங்கிய

அருள் ஆசியுரை

இறைவன் திருவருள் முன்னிற்க,

வேதங்கள் என்ற நூலைப் பார்வையிட்டேன். இந்நூல் உயர் வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மிகவும் பயன் படும். ஆசிரியர் நன்கு ஆராய்ச்சி செய்து எழுதியுள்ளார். இந் நூல் ஆசிரியர் சமயக் குருவாக இருந்து கிரியைகளைச்செய்து வருவதும் அல்லாது, இப்படியான ஆராய்ச்சி நூலையும் வெளி யிட்டு வருவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஷை ஆசிரியர் என் நல் மாணாக்கன் (சிஷ்யன்) என்று கூறிக்கொள்வதில் மிகவும் சந்தோஷப்படுகின்றேன். அவ ருக்கு நீண்ட ஆயுளையும், குறைவற்ற செல்வத்தையும் கொடுத் தருள வேண்டுமென்று இறைவனை உள்ளன்புடன் வேண்டிக் கொள்கின்றேன். அவருடைய முயற்சி தொடர்ந்தும் வளர வேண்டும் சைவ உலகுக்கு இதுபோன்ற நூல்களை ஆசிரி யர் வெளியிட்டு வைக்க இறைவன் அருள்புரிய வேண்டும் என்று எல்லாம் வல்ல சர்வேஸ்வரனை உள்ளன்புடன் வேண்டி ஆசிரியருக்கு எனது உளம் நிறைந்த அருள் ஆசியை வழங்கு கின்றேன்.

காயாத்திரீ

ஓம் பூர்ப் புவஸ் ஸுவா
தத்ஸ விதுர்வ ரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தி யோ யோ நஃ ப்ரசோதாயாத் !!
சுபமஸ்த்து

மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.
30-12-91.

க. சிவபாதசுந்தரக் குருக்கள்

உ.
சிவமயம்

பருத்தித்துறை
பர்வதாம்பிகே சமேத பசுபதீஸ்வரம் பெருமானின்
பிரதம குரு

சிவஸ்ரீ தா. வாசுதேவக் குருக்கள்

"இந்துமத குரு"
வழங்கிய

ஆசியுரை

குருவந்தனம்

குருப்பிரம்மா, குருவிஷ்ணு, குரு தேவோ மகேஸ்வரா:க
குரு சாட்ஷா பிரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமக.
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்தச் சென்னியும் தந்த தலைவன் தான வணங்கி அவன் புகழ்கள் பலவற்றையும் வாயார வாழ்த்திப் பாடும் போது நம்முடைய உள்ளம் உருகி இறைவன் பால் பெரிதும் ஈடுபட்டுப் பக்தி வெள்ளத்தில் திளைக்கின்றது இத்தகைய வாழ்த்தான இருக், யஜுர், சாம, அதர்வண ஆகிய நான்கு வேதங்களைப் பற்றியும், பாடசாலைக் கல்வி சம்பந்தமான விடயங்களைத் தொகுத்து மாணவர்களுக்கு ஏற்ற முறையில் கைநூலாக பிரசுரிக்க முன்வந்துள்ளார் நெல்லண்டை அருள்மிகு பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ தி, சோமாஸ்கந்தராஜக்குருக்கள் பீ. ஏ. அவர்கள்.

இதனை அனைவரும் படித்து பயன்பெற்று அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயக நாயகி ஆகிய பர்வதாம்பிகே ஸமேத பசுபதீச்வரலிங்கேஸ்வரனின் சர்வ அனுக்கிரகம் பெற்று சைவ சமய அறிவைப் பெருக்கிக்கொள்வீர்களாக!

சுபமஸ்து

பர்வதவர்த்தனி பசுபதீஸ்வரர் மலர்த்தாள்
வாழ்த்தி வணங்கும்

சிவஸ்ரீ நா. வாசுதேவக் குருக்கள்
(கிரியா பக்தி மணி)

சிவன் கோவில்
பருத்தித்துறை
28-11-91

தும்பளை - நெல்லண்டை

பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபை

வழங்கிய

வாழ்த்துச் செய்தி

மனிதர்களாகப் பிறந்த நாம் மற்ற ஜீவராசிகளை விட மேலானவர்களாகப் பண்டைய நூல்களில் கௌரவிக்கப்படுகின்றோம். ஏனெனில் நமக்கு உண்மையை அறிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. நாமெல்லோரும்வாழ்க்கையில் ஏற்படும் துக்கங்களை நீக்கிக் கொள்ளவும், இன்பங்களைப் பெருக்கிக் கொள்ளவும் விரும்புகிறோம் இவ்விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதற்குக் கடவுளின் அருளைத் தவிர வேறு ஸாதனமில்லை.

இவ்வுண்மையை உணர்ந்து நெல்லண்டை பத்திரகாளி அம்பாளின் பிரதம குருக்கள் "வேதங்கள்" என்ற தலைப்பில் மலர் ஒன்றை வெளியிடுவதை அறிந்து பரிபாலனசபையினராகிய நாம ஸந்தோசிக்கின்றோம்.

பக்தர்கள், முக்கியமாய் மாணவர்களுக்கு இவ்வெளியீடு பெரிதும் பயன்படும்.

இம் மலர் பக்தி மணம் கமழும் மலராக, சிவானந்த தேன் ததும்பும் மலராக விளங்க நாம் வழிபடுகின்ற பத்திரகாளி அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

பா. சுப்பிரமணியம்
சட்டத்தரணி
பதில் தலைவர்
நெ. ப. அ. கோ. த. ப. சபை

நெல்லண்டை சனசமூக நிலையம்

வழங்கிய

வாழ்த்துச் செய்தி

"தத்துவம்" என்ற சொல்லிற்கு, உண்மை என்பது பொருள். உண்மைப் பொருள் பற்றிப் பேசிய முதல்நூல் வேத மாகும். வேதங்கள் பற்றிய அறிவைப் பெறுவதற்கு இறைய ருள் தேவை; இறையருள் ஆசியைப் பெற்று "வேதங்கள்" என்ற சிறுமலரை "இரத்தினச்சி" என்றழைக்கப்படும். சிவ கேங்கையம்மாவின் நினைவு வெளியீடாக சிவஸ்ரீ தி சோமாஸ் கந்தராஜக் குருக்கள் பி. ஏ. ஐயா அவர்கள் வெளியிடுவதை யிட்டு நெல்லண்டை சனசமூக நிலையத்தின் சார்பில் மன மகிழ்ச்சியடைகின்றோம்.

மேலும் இதேபோல் பல மலர்களை எழுதி சமயத்திற்கும் தமிழுக்கும் சிறந்த சேவையாற்ற வேண்டுமென நெல்லண்டை பத்திரகாளி அம்பாளை இறைஞ்சுகிறோம்.

ந.ா விஜயரத்தினம்
[உப தபால் அதிபர்]

தலைவர்
நெல்லண்டை சனசமூக நிலையம்
பருத்தித்துறை.

பதிவு இல. J/Uc/12/cc/847
நெல்லண்டை
பருத்தித்துறை
1-12-1991

சிவமயம்

திருக்கணித பஞ்சாங்க கணிதர்

"வேதாகம சோதிட பூஷணம்"

அவர்களின் மைத்துனன்

"ஆரிய திராவிட பூஷணம்" "சமஸ்கிருத பண்டிதர்"

(ஆசிரியர்-யாழ்) சிவானந்த குருகுலம்

பிரம்ம ஸ்ரீ கி. சதாசிவ சர்மா

வழங்கிய

உண்மையுரை

"ஹததம் வாக்பூஷணம் பூஷணம்"

"இறைகளோடு இசைந்த இன்பம் இன்பத்தோடு இசைந்த வாழ்வு' பெற்று நன்நிலையில் நல்மாணக்கனைத் திகழ்வது பெறும்பேறு. இப்பேறுபெற்றவர் எமது குருகுலக மாணவரும் அன்பிற்கும் பணிவுக்குமுரியவரும் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானப் பிரதம குருவும் ஆகிய சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராஜக் குருக்கள், *B. A.* அவர்கள்.

இவரின் நன்முயற்சியாலும் அறிவின் முதிர்ச்சியாலும் உருவாகியதே "வேதங்கள்" எனும் அரியநூல். வேதங்களின் பாகுபாடுகள் அவற்றின் தனித்தனியான விளக்கங்கள் யாவும் இலகுவான முறையில் அமைந்திருப்பது போற்றத்தக்கதாகும்.

ஆலய பக்தர்களுக்குக் குறிப்பாக இந்துசமய மாணவர்கட்கும் அவசியமான நூல் என்றே சொல்லலாம்.

"மல்குக வேத வேள்வி" என்ற ஆன்றோர் கூற்றுப்படி வேள்விகள், சடங்குகள் யாவற்றிற்கும் ஆதாரமாக அமைவது

வேதங்களே. வேதங்கள் யாவும் மக்களை வழிப்படுத்த அன்பர் சிவஸ்ரீ குருக்களின் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

இவரின் முயற்சி மென்மேலும் சிறந்தோங்கி வளரும் வண்ணம் எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

லோகாஸ் ஸமஸ்தா;
சுகினோ பவந்து !!

சுபம்!

இஙஙனம்
அன்புடன்
கி. சதாசிவசர்மா

ஆசிரியர் - யாழ் சிவானந்த குருகுலம்
"கீதாலயம்"
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
31-12-91

மதிப்புரை

புதிய உயர் கல்லூரி அதிபர் இந்து நாகரீகத்துறை

விரிவுரையாளர்

ஸ்ரீமதி எஸ். அருள் நங்கை B. A. [Hons]

வழங்கியது

சிறந்த தமிழ் பேரறிஞர்களுள் பேர்போன இடம் பருத்தித்துறை. சமயப் பற்றும், மொழிப்பற்றும், பண்பாட்டிலும் அன்றும் இன்றும் வழுவாது வாழ்கின்ற மக்கள் இவ்விடத்தில் குடிகொண்டுள்ளார்கள். நமது சமயம், மொழி, பக்தி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றைப் பேணி பாதுகாத்து வளர்கின்ற இடமே வித்தியாலயம்.

இவ்வித்தியால மாணவர்கள் நலன்கருதி 'வேதங்கள்' என்ற தலைப்பில் ரிக், யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு பகுதிகளை விளக்கியும், அதன் பாகங்களான கர்மகாண்டம் ஞானகாண்டம், உபாசனா காண்டம் ஆகிய பிரிவுகளை பல பகுதிகளால் விளக்கியும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் தொகுப்பாக அமைந்துள்ளது இந்நூல். இந்நூலாசிரியர் சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராஜக் குருக்கள் B.A. என் நல் மாணாக்கரில் ஒருவர் என்பதில் நான் பெருமையடைகின்றேன்.

அது மட்டுமல்லாது வடமொழி இலக்கியங்களைப்பற்றி எமது நாட்டில் பேராசிரியர் கா. கைலாச நாதக் குருக்களும், பேராசிரியர் வி. சிவசாமியும், நவாலியூர் சோ. நடராஜனும், இந்தியா பி. எஸ், சுப்பிரமணிய சாஸ்திரி போன்று தமிழில் எழுதியுள்ளனர்.

இவ்வகையில் இந்நூல் நம் நாட்டைப் பொறுத்தமட்டில் நான்காவது வடமொழி தமிழ் மொழிபெயர்ப்பாக அமைவதால் இந்நூலாசிரியர் பாராட்டுக்குரியவராகின்றார்.

நீண்ட காலம் "வேதம்" ஓதிய காரணத்தால் தம் உள்ளத்தைக் கவர்ந்த ஒவ்வொரு பகுதியையும்' எடுத்து விளக்கி எழுதியுள்ளார் பல நூல்களைக் கற்று. ஆராயும் நோக்கும் உணர்த்தும் பான்மையும் ஏற்றுக் கொள்ளத்தக்கனவாக உள்ளன.

இத்தொகுப்பில் அமைந்துள்ள அமைப்பு அவற்றிற்கு ஒரு கோவையும் நூலுக்கு ஒரு முழுமையும் தந்துள்ளது தொடர்ந்தும் இலக்கிய இலக்கண சமய நூல்கள் பல்படைத்து அவர் தமிழின் வளர்ச்சிக்கும், சமயத்தின் செழிப்புக்கும் உகந்த தொண்டு செய்வாராக.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க"

எஸ். அருள்நங்கை B. A. (சிறப்பு)
இந்து நாகரீகத்துறை விரிவுரையாளர்

புதிய உயர் கல்லூரி
ஆரியக்குளம் சந்தி
யாழ்ப்பாணம்
30-11-1991

அணிந்துரை

இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகத்தின்
தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா M.A.

அவர்கள் வழங்கியது

எமது ஆலயச் சூழலில் என்றும் தெய்வீகம் மலர்வதை யாவரும் உணர்ந்துகொள்ளுவர். நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் தெய்வீகச் சூழலோடு கூடிய கலை இலக்கியப் பாரம்பரியங்களைக் கொண்டது. பக்தியோடு இயைவுபட்ட கலைப்பாரம்பரிய முனைப்புக்களைக் கொண்ட நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலுக்குப் பிரதம குருவாகக் கல்வி மாணுக சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜக் குருக்கள் பி.ஏ. அமைந்திருப்பது மிகவும் பொருத்தமானதே.

பொதுவாக எமது ஆலயச் சூழலிலே கோயிற் குருமார் கல்வி அறிவு கேள்வி ஞானங்களிலே சிறந்தவர்களாகவே வாழ்ந்து வந்திருக்கிருர்கள். அறிவும், ஞானமும், பக்தி ஒழுங்கும் சமயானுட்டானங்களும் நிறைந்த மேற்படி ஆலய பிரதம குரு வேதங்கள் என்னும் தலைப்பிலே நூலொன்று எழுதுவது இக்காலகட்டத்திலே மிகவும தேவையானது.

வேதங்களின் தோற்றம், அவற்றின் வகைகள் என்பவற்றை முதலிலே பொதுவாக விளக்கிப் பின்னர் ஒவ்வொரு வேதங்களின் அமைப்பையும், அவற்றிலே கூறப்பட்ட விடயங்களையும் மிகவும் தெளிவாகக் குறிப்பிடுவதிலிருந்து இவர் ஒரு நல்ல நூலாசிரியர் ஆகின்ருர்.

இந்து நாகரீகத்தை ஒரு பாடமாகப் பயிலும் க.பொ.த உயர்தர மாணுக்கர்களும், வெளிவாரிப் பல்கலைக் கழக

மாணவர்களும் இந்நூலைப் படிப்பதன் மூலம் பெரும் பயன் பெறுவர்.

மாணவர்களுக்குப் பயன்படும் பாணியிலே ஒருவகைக் "குறிப்பு" விதத்திலே இது அமைந்திருக்கின்றது. இலகுவாகக் கற்கவும், கற்றதை மனதிருத்தத்தக்க வகையிலும் ஆசிரியர் நூலைப் பகுப்பாய்வு செய்துள்ளார். இந்நூலாசிரியர் எமது மாணவர் என்பதில் நாமும் பெருமையடைகின்றோம்.

வேதங்களின் பலவகைப் பரிமாணங்களையும் விளக்கிய ஆசிரியர், வேதத்தின் பெருமையைச் சிறப்பாக நிலைநிறுத்தும் வகையிலே தமது பணியினைச் செய்திருக்கிறார்.

எல்லாவகையிலும் ஆசிரியரின் பணி சிறந்தோங்கப் பிரார்த்திப்போம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

எஸ் சிவலிங்கராஜா M.A.
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை-யாழ்-பல்கலைக்கழகம்

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
30-12-1991

முகவுரை

காலசக்கரம் வேகமாகிச் சுழன்று கொண்டே இருக்கின்றது. அச்சூழலில் உயிர்களாகிய நாம் அகப்பட்டு எண்ணில் காலமாகப் பிறப்பதும் இறப்பதுமாகவே இருக்கின்றோம். புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாக் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய் தேவராய்ச் செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து பிறந்து இளைக்கின்றோம். மனிதராய்ப்பிறந்த ஒவ்வொருவரும்பொருள் விளங்கியோ, விளங்காமலோ இறந்தபின் மோட்ச பதவியை அடையவேண்டும் என விரும்புகின்றனர். மோட்ச பதவியை அடைவதற்கு நல்லவற்றை நினையுங்கள், நல்லவற்றை பேசுங்கள், நல்லவற்றை நாடுங்கள், நல்லவற்றைச் செய்யுங்கள் என்றே இக்கடல் சூழ்ந்த புவிமீதில் உள்ள ஒவ்வொரு சமயமும் போதிக்கின்றது. மோட்சம் என்னும் சொல்லுக்கு வெவ்வேறு மதத்தினர் வெவ்வேறு பெயரிட்டு அழைக்கின்றனரே அன்றி வேறொன்றை அடையலாம் என்று கூறவில்லை. நிர்வாண நிலை என புத்தசமயத்தவர் கூறுவதையும், பரலோகம் என்று கிறிஸ்தவர்கள் கூறுவதையும் சைவர்களாகிய நாம் இறைவனுடன் இரண்டறக் கலந்து சிவஞானம் பெற்று பேரின்பப் பெருவீடு எய்துவர் எனக் கூறுவதையும் காண்கிறோம். இப்பேரின்ப நிலையே சைவர்களின் மோட்ச வீடாகும். ஆகவே பேரின்ப நிலையை அடைவதற்குப் பிறவிப் பிணியை களைய வேண்டும். இதற்கு மருந்து உண்டா? மந்திரம் உண்டா? தந்திரம் உண்டா?

உண்டு. மந்திரமும், தந்திரமும், மருந்துமாகித் தீரா நோய் தீர்த்தருள வல்லான் ஒருவன் இருக்கின்றான். அவனைப் பேராயிரம் பரவி வானோர்கள் ஏத்துகின்றனர். அவனும் அவனைப்பிரியாத அடியார்களுக்கு வாரத செல்வங்களை வருவிக்கின்

ருண். அவன்தான் சோதியாய்ச் சுடராய் சூழொளிவிளக்காய் எங்குங்கலந்துறையும் பரஞ்சோதி. அவனை நாம் மனமொழி மெய்களால் வழிபடுதலே சிறப்பானதாகும். இம்மங்காதமணி விளக்கைப்பற்றியும் இவ்விளக்கின் சோதியிற் கலக்கும் நெறியைப்பற்றியும் நமக்குத் தெளிவாகக் கூறுவன வேதஉபநிடதங்கள், பதினெண் புராணங்கள், இதிகாசங்கள், திருமுறைகள், இறைவனை மெய்யுணர்வால் கண்டுணர்ந்த அருள்ஞானிகளின் திருவாக்கு, தேனினும் இனியது.

இன்று சைவக் குழந்தைகளாகப் பிறந்த எமது குழந்தைகளுக்கும் இந்து நாகரீகத்தைக் கற்கும் மாணவர்களான க. பொ. த. உயர்தர (A L.), பல்கலைக்கழக முதற்கலைத் தேர்வு (G.A.Q.) இரு பிரிவினருக்கும் பாடநூலாகவும், இறுதிக்கலைத் தேர்வு வகுப்பிற்கு (B.A.) ஒரு கையேடாகவும் பயன்படக் கருதி "வேதங்கள்" என்ற இச்சிறு நூல் வெளியிடப்படுகிறது.

வேதங்களை பொருளுணர்ந்து ஓதுவோரினதும், ஓத உதவிபுரிந்தோரினதும் ஏழ் ஏழ் சுற்றம் வீடுபேறு எய்துவர் என்று பெரியோர் கூறக்கேட்ட அடியேன் எனது அன்புக்குரிய பாட்டியும், நலமான வாழ்விற்கு அரண்செய்யும், நமது புகழ்சான்ற நெறிகளை மறந்து புறஞ்சென்று அல்லலுறும் இக்காலத்தில், வேதாரணியத்திலிருந்து வந்து நெல்லண்டை எனக் காரண நாமம்பெற்ற பழம்பதியில் வேதாரணிய முனிவரால் வழிபடப்பட்டவரும், பின் எமது மூதாதையரால் அர்ச்சிக்கப்பட்டவருமாகிய சிவ-சக்தி ஜோதியில் ஆவிர்பவித்துமஹாதேஜஸ்ஸுடன், மற்ற எவராலும் சம்ஹரிக்க முடியாத தக்ஷனை ஸம்ஹரித்து, பின்பிழைபொறுத்து அருள்புரிந்த பத்திரகாளி ஸமேத வீரபத்திரப் பெருமானையும், இலட்சுமணறுந் தோட்டப்பிள்ளையார், முத்துமாரி அம்மன், வீரமாகாளி அம்மன் ஆகிய தெய்வங்களை அல்லும் பகலும் பிரார்த்தனை செய்து எமக்குச் சகல ஐஸ்வரியங்களையும் பெற்றுத்தந்தவரும் "இரத்தின ஆச்சி' எனப் பலரால் இன்புடன் அழைக்கப்பட்டவரும் 2)-1!-9! ல இவ்வுலக வாழ்வை நீத்தவருமாகிய சோமசுந்தர ஐயர் - சிவகெங்கை அம்மா அவர்களின் ஆத்மசோதி ஸ்ரீ சோமாஸ்கந்த மூர்த்தியின் திருப்பாதகமலம் கலக்க வேண்டு

யென நெய்விளக்கேற்றி இந்நினைவு மலரை வெளியிடுகின்றேன்.

பலத்த காகிதத் தட்டுப்பாடும், நெருக்கடியான கால கட்டமுமாகிய இவ்வேளையில் மாணவ சமூகத்திற்குப் பயன் படக்கூடிய நூல் ஒன்றை வெளியிடும்படி பணித்த சிறியதந்தை யார் க. சோமசுந்தரம் அதிபர் அவர்கட்கு என்றும் கடமைப் பட்டுள்ளேன்.

நூல் முழுவதையும் பரிசோதித்து பற்பல திருத்தங்கள் செய்தும் வேண்டுவன கூட்டியும் துணைபுரிந்த எனதன்பிற்பிரிய ஆசிரியரும், பாலபண்டிதருமான மு. வேலாயுதபிள்ளை டிப்பி ளோமா (Dip-in-Tamil) அவர்களின் இப்பரோபகாரமாகிய பெரு நன்றியை யான் என்றும் மறவாமற் பாராட்டும் துணையே யன்றிப் பிரதியுபகாரம் கண்டிலன்.

எனது குருநாதர்களான ''ஆரிய திராவிட பூஷணம்'' ''சமஸ்கிருதபண்டிதர்'' பிரம்மஸ்ரீ கி. சதாசிவசர்மா அவர்க ளும், சிவஸ்ரீ ஸ்கந்த சிவபாத சுந்தரக் குருக்கள் ஐயா அவர்க ளும், யாழ் பல்கலைக் கழகத் தமிழ்துறை பேராசிரியர் திரு. எஸ். சிவலிங்கராஜா M. A. அவர்களும் இந்து நாகரீகத் துறை விரிவுரையாளர் ஸ்ரீமதி அருள் நங்கை சண்முகநாதன் அவர்களும் முறையே உண்மையுரை, அருள்ஆசி, அணிந் துரை, மதிப்புரை வழங்கியிருப்பதை எண்ணி மகிழ்கின்றேன். அவர்களுக்கு நன்றி கூறவேண்டுமெனில் வார்த்தைகளால் இயலாது. ''நெஞ்சம் உமக்கே இடமாய் வைத்தேன் நினை யாது ஒரு பொழுதும் மறந்தறியேனே'' என்ற ஆன்றோர் அரு ளிய முதுமொழியையே மிகவும் வணக்கத்துடன் அவர்களுக் குச் சமர்ப்பிக்கின்றேன். அம்பிகையின் திருவருள் என்று இத் தொண்டிற்குக் குருவருளையும் கூட்டிவைத்ததைப் போன்று மாணவ சமூகத்திற்கும் இது பெரிதும் பயன்பட வேண்டும் என்று பிரார்த்தனை செய்கின்றேன்.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய பருத்தித்துறை சிவன்கோவில் பிரதம குரு சிவஸ்ரீ தா. வாசுதேவக் குருக்கள் அவர்களுக்கும் வாழ்த்துச் செய்தி வழங்கிய நெல்லண்டைப் பத்திரகாளி அம்

மன் கோவில் தர்ம பரிபாலனசபை பதில் தலைவர் திரு. பா. சுப்பிரமணியம் சட்டத்தரணி அவர்களுக்கும், நெல்லண்டை சனசமூக நிலைய நிர்வாகசபை உறுப்பினர்கட்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நெருக்கடியான காலகட்டத்திலும் சிரமம்பாராது இரவு பகல் தொடர்ந்து அச்சுக்கோர்த்து உதவிய ஸ்டான் கார்ட் பிரின் டர்ஸ் லிமிட்டெட்" அச்சக அதிபர் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகட்டும்.

வழமைபோல் இந்நூலையும் அழகுற அமைப்பதற்கு எனக்கு பலவழிகளிலும் ஊக்கந்தந்துதவிய அன்புக்குரிய நண்பன் தம்பு இராமச்சந்திரனுக்கும் எனது நலலாசிகள் உரித்தாகட்டும்.

ஓம்

ஸர்வே ஷாம் ஸ்வஸ்திர் பவது ஸர்வேஷாம் ஸாந்தர் பவது
ஸர்வேஷாம் பூர்ணம் பவது ஸர்வேஷாம் மங்களம் பவது
ஸர்வே பவந்து ஸுகின: ஸர்வே ஸந்து நிராமயா:
ஸர்வே பத்ராணி பஸ்யந்துமா கஸசித் துக்க பாக் பவேத்
அசதோமா ஸத்கமய தமஸோமா ஜ்யோதிர் கமய
த்ருத்யோர் மா அம்ருதம் கமய;

ஓம பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்
யதே பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ண மேவா வஸிஷ்யதே

ஓம் ஸாந்தி ஸாந்தி ஸாந்தி:

தி. சோமாஸ்கந்தராஜ குருக்கள்

நெல்லண்டை பத்திரகாளி அமமன்
கோவில் பிரதம குரு
தும்பளை-பருத்தித்துறை.
1-1-1992

வேதங்கள்

"வேத மோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்பது திருமூலர் வாக்கு! இறைவனால் ஆக்கப்பட்ட வேதங்கள் நான்கு. அவை முறையே இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் எனப்படும். உலகிலே தோன்றிய முதல் நாகரிகம் வேத நாகரிகமாகும். இவை தெய்வீக சம்பந்தமானதும், இலக்கியப் பரப்புடையதும், சமயக் கருத்துடையதும், தத்துவப் பொருள் நிறைந்ததும், அறிவியல் ரீதியானதும், சிறந்த மொழிவளம் பெற்றதும் ஆகும். பிற்காலத்தில் மேல்நாட்டறிஞர்களால் ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்டதும், மொத்தத்தில் இந்திய சமய தத்துவத்தை எடுத்துக்கூற பயன்பட்டவையும் இவ்வேத நூல்களேயாகும். 'சமயம் என்பதற்கு வழி நெறி-ஒழுக்கம் எனப் பொருள் கொள்ளலாம். இந்நெறிக்கு ஆதாரமும் முதல் நூலும் இவ்வேத நூல்களேயாகும்.

"வித்" என்ற வடமொழி அடியில் இருந்து பிறந்தது வேதம். வித் என்ற வடமொழிச் சொல்லடிக்கு அறிதல் என்பது பொருள். எனவே வேதங்கள் என்ற சொல்லிற்கு அறிவு நூல்கள் அல்லது தெளிவு நூல்கள் என்பது பொருளாகின்றது. இவ்வறிவு இருவகைப்படும். ஒன்று உலகியல் மற்றொன்று மெய்யியல். "மெய்யியல்" என்றால் ஞானம் பற்றியது எனலாம். இந்நிலையிலேயே வேதங்கள் அறிவுப் பொக்கிசங்கள் எனப்பட்டன.

வேதங்கள் நான்கும் மூன்று வகையில் அடங்கும். அவை முறையே கர்மகாண்டம் உபாசனா காண்டம் ஞானகாண்டம் என்பவையாம். வேதங்களை ஒவ்வொன்றையும் மத ஆசாரப் பகுதியென்றும், தியானப் பகுதியென்றும், மெய்யறிவு தரும் பகுதியென்றும் பிரிவு செய்யலாம். மந்திரங்களும், பிராமணங்களும் கர்மகாண்டத்தைச் சேருவன, ஆரண்யங்கள் உபாசனைப்பகுதியின. உபநிஷதங்கள் ஞான காண்டத்தைச் சேர்ந்தவை. இவ் வேதங்களின் சார்பு நூல்களாக பிராமணங்கள, ஆரண்யங்கள், உபநிஷதங்கள், சூத்திரங்கள் அமைகின்றன. உலக நடைமுறைக்குத் தேவையான பொருட்களையும், வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியமான அறிவையும், படிமுறையாக, ஒழுக்க நெறியாக அமைத்துக் காட்டும் பகுதி கருமகாண்டம் ஆகும். அறிவு நோக்கில் மறைமுகமாக இருக்கும் இறையனுபவத்தை உணர்வு ரீதியாக உணர்ந்து, தெளிவு பெறும் பகுதி ஞானகாண்டம் ஆகும் அறிவிக்கும் தெளிவிக்கும் உதவு மந்திரங்கள் அல்லது தியானங்கள் உபாசன காண்டமாக விரிவுபெறும். கர்மகாண்டப் பகுதியில் சங்கிதைகள், பிராமணங்கள் ஆகியவையும், ஞானகாண்டப் பகுதியில் உபநிடதங்களும் சூத்திரங்களும் அமையப்பெற்று காணப்படுகின்றன. பிராமணங்களின் உரைப்பகுதி புராண இதிகாசங்களாகவும் ஆரணியங்களின் ஒழுக்கப்பகுதி, தர்மசாஸ்திரங்களாகவும் வளர்ச்சியுற்றன. புராணங்கள் சமய நம்பிக்கைக்கான உண்மைகளைக் கூறுகின்றன. இவ்வுண்மைகளே தெய்வங்களாக உருப்பெற்றன. இத்தெய்வங்களை வழிபடுவதற்கு வழிபாட்டு முறைகள் பழக்க வழக்கங்கள் தோற்றம் பெற்றன இவையனைத்தையும் விளக்கும் பகுதி கர்மகாண்டப்பகுதியாகும். இதேபோல ஞானகாண்டப் பகுதியான உபநிடதங்கள் ஆராய்ச்சியையும் ஆராய்ச்சி பூர்வமான முடிவையும் கொண்ட தத்துவ வளர்ச்சிக்கு அடிக்கல்லாயின எனலாம்.

இருக்கு வேதம் மந்திரப் பகுதியாக விளக்கப்படுகின்றது. இம்மந்திரங்கள் விரிவடைந்து தொகுப்பாயின, இத்தொகுப்புக்கள் சங்கிதைகள் எனப்பட்டன. இதனை மேலும் பிராமணங்கள் எனப்பகுத்தார்கள். சாம வேதம் இருக்குவேதப் பாடல்களுக்கு இசை அமைத்துக் கூறுகின்றது. இதில் எழுபத்தைந்து பாடல்கள் தவிர்ந்த ஏனையவை இருக்கு வேதப் பாடல்களே. யசூர் வேதம் இருக்கு வேதப் பாடல்களை வேள்வி

யிலே பயன்படுத்தும் விதத்தையும் யாக விதிகளையும் கூறு கின்றது. யஜுஸ்' எனில் ''வேள்வி வாய்ப்பாடு'' எனப் பொருள்படும். வசன நடையிலே இவ்வேதம் அமைந்திருக்கின் றது. இது கிருஷ்ண யசூர்வேதம, சுக்கில யசூர் வேதம் என இரு பிரிவுகளைக்கொண்டதாகும். இந்த யசூர் வேதம் நாற் பது அத்தியாயங்களையும் பல சாகைகளையும் கொண்டுள்ளது.

ஏற்கனவே குறித்த மூன்று வேதங்களிலும் ஒரு தொடர் பினைக் காணலாம். ஒரே வட்டம் என்றும் சொல்லலாம். இவ் வட்டத்தொடரிலே வேள்வியிலே பயன்படும் பாடல்களும், அவற்றிற்கான இசை, கிரியை விதிகள் ஆகியனவும் கூறப்பட் டுள்ளன. இந்த அறிவு நூல்கள் மூன்றையும் இந்திய தத்துவ ஞானம் ''திரைவித்தியா'' என்ற நாமத்தினுல் அழைக்கின் றது. "திரைவித்யா" என்ருல் மூன்று அறிவுநூல் எனப் பொருள்படும். ஆனுல் நான்காவது வேதமாகிய அதர்வண வேதம் இவற்றில் இருந்து வேறுபட்டது. இக்காரணத்தால் இவ்வேதம் நீண்டகாலமாக சேர்ததுக்கூறப்படவில்லை. அதர் வண வேதம் பாமரமக்களின் சமய நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் அவர்கள் படும் அல்லல்களையும், கஷ்டங்களை வேள்விவிளக்கங்களையும் மாந்த்ரீக முறைகளையும் கூறுகின் றது. எனவே காலக்கிரமத்தில் மூன்றையும் தவிர்த்து அதர் வண வேதத்திற்கு முன்னுரிமை கொடுத்துவந்தனர். ஆனுல் பிற்காலத்தில் நான்கு வேதங்களும் முறைப்படி ஓத வேண்டு மென சேர்க்கப்பட்டிருக்கலாம்.

பிராமணங்கள் உரைநடை வசனவிளக்கம், வேதசூக்த வேள்விவிதி, விபரவிளக்கம் என்பவற்றைக் கொண்டுள்ளன. பிற்காலத்தில்எழுந்த இதிகாஸங்களுக்கும் அக்கினிபுராணத்தை முதலாகக் கொண்ட ஏனைய புராணங்களுக்கும் முன்னோடி யாக அமைந்தன. காட்டில் வாழும் துறவிகளுக்காக எழுதப் பட்டவை ஆரண்யங்கள் ஆகும். மேலும் வேள்விகளுக்கான மறைபொருள் விளக்கமும் உண்டு. சுருக்கமாக ஒழுக்கநெறி பற்றிக் கூறியதால் பிற்காலத்திற் பல ஸ்மிருதிகள் தோன்று வதற்குக் காரணமாக ஆரண்யங்கள் அமைந்திருக்கலாம்.

ஆரண்யங்களைத் தொடர்ந்து தத்துவநூல்களாகிய உப நிஷதங்கள் தோற்றம் பெற்றன. வடமொழியில் ''சத்''என் னும்வினை; இருத்தல் என்னும் பொருளைக் காட்டும். உப

நிஷத் என்பதில்உள்ள 'உப'','நி'' ஆகிய உபாசர்க்கங்கள் நெருங்கிக் கீழ இருத்தல்'' என்றபொருளையே விளக்கின. பின்னர் அவை சில அறிவுரைகளைக் குறிப்பதாயிற்று. இதுவே ஈடேற்றம் பொருட்டு பக்தவமுள்ள சிஷ்யனுக்கு ஞான அறிவுமிக்க குருவினால் உபதேசிக்கப்பட்ட கருத்துரைகளாகின. இவ்வுபதேசங்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் தனிப்பட்ட ஞான அறிவு மிக்கவரால் உருவாக்கிய சிந்தனைகளாகும். இச்சிந்தனைகள் மூன்று பொருளைப் பற்றியன. அவை பரமாத்மா (பிரம்ம, இறை) ஜீவாத்மா (ஆத்மா உயிர்) பிரபஞ்சம் என்பனவாம். இச்சிந்தனைகள் இரண்டும் ஒன்றே என்ற தத்துவத்தைக் காட்டுகின்றன. இதனை உபநிஷத்துக்கள் ''தத்துவம் அஸி'', 'ஜீவம் கலுப்பிரம்மம்'', ''சோ அகம் அஸ்மி'', ''அகம் பிரம்மஅஸி'', ''ஏகம் ஸத்'' எனும் மகா வாக்கியங்களால் விளக்கின. இவை பற்றிக் கூறும் உபநிடதங்கள் ஈசோபநிடதம், கேனோபநிடதம் மாண்டுக்கியோப நிடதம், தைத்திரியோப நிடதம், சாந்தோக்கியோப நிடதம். பிரகதாரண்யாக உபநிடதம், கௌசீடகி உபநிடதம், ஸ்வதேஸ்வதர உபநிடதம் ஐதரேய உபநிடதம் என்பனவாகும்.

வேத கால இறுதியில் வேதங்களைக் கற்பதற்கும் அவை கூறும் தன்மைகளைப் பாதுகாப்பதற்கும் சூத்திரவடிவில் எழுந்தனவையே வேதசூத்திரங்களாகும். இவை சொற்சுருக்கமும் பொருட்செறிவும் கொண்டமைந்தன. இதனால் சூத்திரங்கள் எனப்பெயர் பெற்றன. இதனை வேதாங்கங்கள் எனவும் அழைப்பர். அவை சிட்சை, வியாகரணம், கலைபம், நிருத்தம், சோதிடம், சந்தோவிசிதி என்பனவாகும். சிக்ஷை (சிட்சை)-ஒலியியலின் தன்மை, வியாகரணம்— இலக்கண முறைமை, கல்பம் இம்மை, மறுமை நிலைகளை விளக்கும் மந்திரங்கள், நிருத்தம் - சொல்லாராய்ச்சி, சோதிடம் திதி,கரணம்,யோகம்,சந்தோவிசிதி - இசைவடிவ அமைப்பு.

இவ்வேதங்களை இயற்றியவர்கள் இறையனுபூதிபெற்ற ரிஷிகளேயாவார். இவர்கள் ஞான நிலையிலே தாம்பெற்றமெய்ஞ்ஞான அறிவை — உணர்வைப் பெற்றவர்கள். இந்த உணர்வு இறைத்துவத்தைக் காட்டியது. இவ்விறைத்துவமாகிய சதாசிவத்திருமேனியிலே நான்கு திருமுகங்கள் உண்டு. அவை ஈசானம், தற்புருடம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகியன. இம்முகங்களிலிருந்து இருக்கு, யசூர் சாமம், அதர்வனம் என்னும் வேதங்கள் தோன்றியன.

இருக்கு வேதம்

வேதங்களுள் முதலில் வைத்தெண்ணப்படுவது இருக்கு வேதம். இது காலத்தால் முந்தியது. "இருக்கு" என்பதற்கு பாட்டு என்று பொருள். இவ்வேதம் பாட்டுக்களைக் கொண்டமைந்திருப்பதால் இருக்கு வேதம் எனப் பெயர் பூண்டது. "சங்கிதை என்றால்" "தொகுதி" எனப்பொருள்படும். இருக்கு வேத சங்கிதை என்றால் பாடற்றொகுதி எனக்கொள்ளக்கிடக்கிறது. எனவே இருக்குவேத சங்கிதைகள் பாட்டுக்களையுடைய வேதமெனலாம். இதனை பலஞானிகள் பல்வேறு காலங்களில் வெவ்வேறு சூழ்நிலையிலே ஆக்கினர். பின் அவை சங்கிதைகளாகத் தொகுக்கப்பட்டன. அதனால் இவ்விலக்கியத்திற் காலத்தினால் முந்தியும் பிந்தியும் எழுந்த பாடல்கள் இடம்பெறுதல் இயற்கையாகும்.

இருக்கு வேத அமைப்பு பத்து மண்டலங்களையுடையது. இரண்டாம் மண்டலம் தொடக்கம் ஏழாம் மண்டலம் வரையுள்ள பாடல்கள் மிகப்பழைய காலத்தில் நடைமுறைப் பட்ட அல்லது இயற்றப்பட்ட விடயங்களைக் கூறுவதாகும். இச்சம்பவங்களை எடுத்துக்கூறும் நூல் "அனுக்கிரமணி"எனப் படும். இருக்கு வேதத்தில் வரும் பாடல்களை இயற்ற எடுத்தாளப்பட்ட யாப்புமுறை முதலிய அம்சங்களை முதலிலே இருக்கு வேதப் பிராமணங்களே கூறின. எட்டாம் மண்டலத்தில் கண்ணுவர் அங்கிரஸ் ஆகிய இருவரும், அவர்களின் வழித்தோன்றல்களும் இயற்றிய பாடல்கள் இருக்கின்றன. முதலாம் மண்டலம் ஒன்பதாம் மண்டலம் பிற்காலச் செய்திகளைக் கூறுவதால் இவை காலத்தினால் மிகப் பிந்தியவையா

கும். பத்தாம் மண்டலம் சாதிப்பாகுபாடு, கிரியை, யாகம் போன்ற விடயங்களைக் குறிப்பனவாகும்.

இறைவனைப் பற்றிய மிகச்சிறந்த அறிவினை – ஆன்மீக ஞானத்தினை இருக்கு வேதப் பாடல்கள் சித்தரிக்கின்றன. வேள்வியைப் பற்றிய பாடல்களும் பெரும்பாலானவை அமைந்துள்ளன. இயற்கைத் தெய்வங்களை விதந்து கூறும் பாடல்களும் உள்ளன. சிலசெய்யுட்கள் தத்துவரீதியில் ஆனவை. வேறுசில உலகியற்பார்வை உடையவை. இவ்வகையில் உள்ள பாடல்கள் 'தானஸ்துதி" எனப்பெயர் பெறுகின்றன. சூதாட்டக்காரன் பற்றிய செய்தியும் உண்டு. புரூரவஸ், ஊர்வசி போன்றோர் கதைகளைக் கூறும் பாடல்கள் சிலவும் உள்ளன.

இந்து மதத்தவரின் புனித நூல்களான நால்வேதங்களிலே முதன்மை வாய்ந்து விளங்கும் நூல் இருக்காகும். வைதிக மரபிலே "சுருதி" என வடமொழியிலும், தமிழ் மொழியிலே ''மறை" எனவும் அழைக்கப்படுவனவும் இவ்வேதத்தினையே யாகும். சங்க காலப்பாடல்களையும், இருக்கு வேதப் பாடல்களையும் ஒப்பீடு செய்யும் அளவிற்கு இயற்கையை விரித்துப்பாடும் மரபு காணப்படுகிறது. எழுதாமல் வாய்மொழிமூலம் வழங்கி வந்தமையால் இதற்கு எழுதாமறை, எழுதாக்கிழவி என்றும் தத்துவரீதியில் முடிவு கொண்டமையால் ''மெய்ஞான விளக்கு'' என்றும் மனிதர் அல்லாத மெய்ஞான அறிவுள்ள இறை அனுபூதிமான்கள் இயற்றியமையால் ''அபௌருஷேயம்" என்றும் யாராலும் தோற்றப்படவில்லை என்பதினால் ''தோன்றாக் கிழவி" என்றும் பெயர் பெறும்.

இருக்கு வேதம் சமயரீதியில் மிகக்கூடிய அம்சங்களைக் கொண்டது. உலகியலைச் சில பாடல்கள் அழுத்திக்கூறுவனவாக அமைகின்றன. ''நீண்ட ஆயுள், வீரர்களான புத்திரர்கள், நிறைந்த செல்வம் போன்றவற்றைத் தெய்வங்களிடம் கேட்டுப்பெற்ற செய்திகள் காணப்படுகின்றன. காதல்பற்றியும் சில பாடல்கள் உள. சங்க இலக்கியங்களிலே ''யாதுமூரே யாவரும் கேளிர்" போன்ற இலட்சியக் கருத்துக்களை இருக்கு

வேதத்தில் காணலாம். உதாரணமாக "உண்மைப்பொருள் ஒன்று" ஞானிகள் அதனைப் பலவாறு கூறுவர். நல்ல கருத்துக்கள் எல்லாத்திசைகளிலும் இருந்து எங்களுக்கு வருவதாக", எனவும் வட்டத் தொடர்பு, பூச்சியவெளி என்பனவும் சிறந்த இலட்சியங்களாக அழுத்திக் கூறப்பட்டுள்ளன.

உலக இலக்கிய வரலாற்றிலே செய்யுள் இலக்கியமே முதலில் தோன்றியது. மனிதர் தமது உணர்வுகளை முதலிலே பாட்டு மூலம் வெளிப்படுத்தினர் எனவும், இலக்கிய வரலாற்றிலே வசனத்திற்கு முன் செய்யுட் கவிதை தோன்றிவிட்டது எனவும் மொழி ஆசிரியர்கள் கூறுவர். இக்கருத்து வடமொழி தென்மொழி இலக்கியங்களுக்கும் பொருந்தும். இருக்கு வேதப் பாடல்களை இயற்றிய புலவர்கள் ரிஷி கவி என அழைக்கப்படுவர். "ரிஷி" எனில் பார்ப்பவர் எனப் பொருள்படும். "கவி"எனில் காட்டுபவர் எனவும் பொருள்படும். மொழி நூலாசிரியர் கருத்துப்படி ஆங்கிலத்திலே "காட்டுதல்" எனும் பொருள்படும். "Show" எனும் சொல்லிற்குத் தொடர்புபடும் எனப் பேராசிரியர் ஹரியன்ன குறிப்பிடுவர். சொல்லோடு பொருளாக "கவி" எனும் சொல் காட்டுபவர் எனப்பொருள்படும். காட்டுபவர் கட்டாயமாகப் பார்த்திருப்பார். தமிழிலுள்ள "பார்ப்பான்" எனும் சொல் இங்குள்ள பார்ப்பானுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. இருக்கு வேத சூக்தங்களை இயற்றிய ரிஷிகள் "மந்திரத்திரஷ்டா (மந்திரங்களைக் கண்டவர்) என அழைக்கப்படுவர்.

சமஸ்கிருதத்திலே "காவ்ய" என்ற சொல்லே கவிதையைக் குறிக்கும், கவிஞரால் இயற்றப்படுவது காவியம் என இச்சொல் விளக்கப்படும். கவிஞனைப் படைத்தகடவுளுடன் ஒப்பிடும் மரபும் உள்ளது. மேலும் கவி எனும் சொல் எல்லாம் அறிந்த தெளிவான ஞானமுள்ள கவிஞன், ஞானி, அறிஞன், சிந்தனையாளன், தலைவன், பாடகன், பாணன், அசுர், குரு, சூரியன், பிரம்மா முதலிய பொருள்படும். ஆன்மீக ஞானத்திற் சிறந்த பிரஉற்மணஸ்பதீ [பிரஹ்மணஸ்பதி] எனும் பிரார்த்தனையிலே அவர் கவிகளிற் சிறந்தவர் [கவீம் கவீனும்-] எனக்கூறப்பட்டுள்ளது. இதே பிரார்த்தனை பிள்ளையாருக்கும் உரியது.

ஆறுகள், காடுகள்பற்றி கவினுயமுள்ள பாடல்கள் உள்ளன. ஆறுகள் பற்றிய பாடல்களிலே சரஸ்வதி ஆறு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலப் போர்த்தெய்வமாகிய இந்திரனின் வீரச்செயல்கள் பிரமாதமாக ரிஷிகள் வருணித்துள்ளனர். மேலும் மறைத் தெய்வமாகிய பர்ஜன்யன் பற்றியும். இராத்திரிபற்றியும், சவிதா பற்றியும் பாடல்கள் பல உள்ளன. சூதாட்டக்காரன பற்றிய பாடலிலே அங்கதச்சுவை மிகவுண்டு. எடுத்துக்காட்டாக "எனது மாமியார் என்னை வெறுக்கின்றார். மனைவி வெளியே துரத்துகின்றாள்." எனக் கூறுகின்றன. துபன்த்தில் தடைமும் அவனுக்கு எவரும் அனுதாபம் காட்டிலர். விலைக்குவிடப்பட்ட முதிய குதிரையைப் போல சூதாட்டக்காரனிடத்தில் எனக்கு பயன்பாடு ஒன்றும் இல்லை என கூறுகின்றான். தாய், தந்தையர், சகோதரர் கூட அறியோம் என்கின்றனர். சுற்றத்தவர்கள் அவனை கூட்டிக்கொண்டு செல்லுங்கள் என்கின்றார்கள். என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அன்றைய கல்வி முறைபற்றிய செய்திகள் சில உள. அவை உவமைகளும் உண்டு. தவளைப்பாடலிலே தவளைகள் ஒன்று கத்தியபின் ஏனையவை ஒன்று சேர்ந்து கத்துதல் போல் மக்களிலே தம்பதிகள் போல நல்ல அன்புள்ள மனைவி தன்னுடைய ஆடைகளை தன்கணவனுக்கு காட்டுதல் போல என்பனவாம். காதல் குடும்பம் என்ற பகுதிகளும் இடம் பெற்றுள்ளன.

ஆரம்பத்திலேயே தத்துவக் கருத்துக்கள் எழுந்துவிட்டன. தொடக்கத்திலே அசத்துமில்லை சத்துமில்லை. காற்றுமில்லை. அப்பாலுள்ள வானமுமில்லை. அது என்ன கொண்டிருந்தது? எங்கு யாருடைய பாதுகாப்பிலிருந்தது? மிக ஆழமான அளவிட முடியாத நீர் இருந்ததா? அங்கு மரணமும் இல்லை, சமத்துவமும் இல்லை. இரவோ பகலோ இல்லை. காற்றும் இல்லை. அப்பரம்பொருள்தான் எல்லாம். அதைவிட வேறு ஒன்றும் அப்பாலிருக்கவில்லை என வரும் பகுதி கவனிக்கதற்பாலது. இப்பாடல் வேதத்திலுள்ள மிகச் சிறந்த தத்துவத்தன்மையுடையதாம் எனப் பேராசிரியர் லூயி ரெனு குறிப்பிட்டுள்ளார்.

வேதங்கள் ஓசையை உரியவாறு எழுப்பி ஒலிக்கப் படவேண்டியவை. வேதம் ஓதும்போது ஓதுபவரின ஒலி வேறுபட்டு மூன்று நிலைகளில் காணப்படும். அவை ''ஸ்வரங்கள்'' என்று கூறப்படும் இவ் ஒலி வேறுபாடுகள் உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் என மூவகைப்படும். குரலை உயர்த்துவதனல் எழுப்பப்படும் ஓசை உதாத்தமாம். குரலை தாழ்த்தி ஒலி எழுப்பும் போது வருவது அநுதாத்தம். இரண்டும் ஒரேசமமாக வரும்போது ஏற்படும் நிலை ''ஸ்வரிதம்'' எனப் படும்.

கலை, கலாச்சாரம், ஒழுக்கம் என்பனவற்றின் வழி முறைகளையும் கற்பனை இயல்பு இயற்கை வருணனை போன்றவற்றையும் விளக்கும் சமய நூலாகவும், இலக்கிய நூலாகவும் அமையும் இருக்கு வேதம் அரியதொரு பொக்கிசமெனலாம்.

இருக்கு வேதத்தில் வணங்கப்பட்ட தெய்வங்கள்

இந்து சமயத்தில் வணக்கத் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை. பழக்கவழக்கங்களும், மரபுகளும், சம்பிரதாயங்களும் இதனிடத்தே தோன்றின. இத்தோற்றத்தின் ஆரம்ப நிலையை வேதங்கள் மூலம் அறியலாம். இருக்கு வேதத்திலே போற்றப்பட்ட வணக்கத் தெய்வங்களை மூவகையாக வகுத்துள்ளார். அவை ஒன்று ''விண்ணைச்சார்ந்த தெய்வங்கள்'' ஆகும், ''மண்ணைச்சார்ந்த தெய்வங்கள்' ஒருவகை. மற்றொரு வகை ''விண்ணுக்கும், மண்ணுக்கும் இடைவெளியைச் சார்ந்த தெய்வங்கள்'' எனலாம். விண்ணையாளுகின்ற தெய்வங்களாக தியௌ, மித்திரன், வருணன், ஆதித்தியன், சூரியன், சவிதா, பூஷன்' விஷ்ணு, இரு அஸ்வினி தேவர்கள், உஷை, இராத்திரி என்னும் தெய்வங்கள் விண்ணுலகுடன் நெருங்கிய தொடர்புடையன. பிருதுவி, அக்கினி, பிருகஸ்பதி, சோமன், துவஷ்டா என்போரும் சிந்து, விபாட், சதுத்ரீ, சரஸ்வதி போன்ற தெய்வங்களும் மண்ணுலகுடன் பிணைப்பு மிக்கவை. ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடைப்பட்ட தெய்வங்கள் இந்திரன், திருத அபத்தியன், அஜ ஏகபாதன், உருத்திரன், மருத்துக்கள், வாயு, பர்ஜன்யன் என்பவர்களும் "அப்பு' எனும் நீர்த்தெய்வமுமாம். இருக்கு வேதபாடல்கள் இத்தெய்வங்களைப் போற்றும்முகமாகவே அமைகின்றன. இயற்கைப் பொருள்கள் இயற்கைச் சக்திகள் தெய்வமாகப் பேணிய நிலையையே இப்பாடல்கள் மூலம் காணலாம். இந்நிலை இருக்கு வேத மிகப் பழைய நிலை. பின்னர் இந்நிலை தெய்வங்களுக்கு வழங்கப்பட்ட அடை-மொழிகளையெல்லாம் தெய்வமாகக் கொள்ளும் மரபு ஏற்பட்

டது. எடுத்துக்காட்டாக "விவஸ்வான்" என்பது சூரியனின் பண்பைச் சுட்டும் ஓர் அடைமொழி. இதுவே பின் "விவஸ்வான்" வேறு "சூரியன்" வேறு எனத் திரிபுபட்ட நிலையாயிற்று

வருணன்

இருக்கு வேதம் குறிப்பிடும் தெய்வங்களில் தலைசிறந்தவன் எனச் செல்லப்படுபவன் வருணன் ஆவான் இத்தெய்வம் சர்வவல்லமை படைத்தவன். இவன் தன்னுடைய இருகண்களாக சூரியனையும்-சந்திரனையும் கொண்டிருக்கின்றான். இதனால் இவன் மிக உயரிய நிலையில் வைத்தெண்ணப்படுகின்றான். உண்ணுதல், இருத்தல், பவனிவருதல், நடத்தல் முதலிய செயல்களை வருணன் ஆற்றுகின்றான். இருக்கு வேத பாடல்மூலம் இவனின் வர்ணனைகளை நாம் அறியலாம். சூரியனைத் தன் கண்ணாகக் கொண்டவன் என்பதால் உலக நடவடிக்கைகளை அறிபவன்; சந்திரனைக் கண்ணாக கொண்டவன் என வருதலால் இரவு நடவடிக்கைகள் அனைத்தையும் அறிபவனாகின்றான். வேள்வி செய்யும்போது இவன் தருப்பையில் இருப்பவன். பளபளக்கும் பொன்னிற ஆடையையணிந்தவன். இவன் பல ஏவலாளர்களை வைத்திருப்பவன்.

வருணன் அரசர்களுக்கரசனாக விளங்கி "சக்கரவர்த்தி" என்ற பெயரைப் பெறுகின்றான். இவனுடைய கட்டளையால் சூரியன் வெப்பம் கொண்டவனாகவும் சந்திரன் தன்னொளியுடையவனாகவும் விளங்குகின்றான் வருணனுடைய ஆணையால் இயற்கையே இயங்குகின்றது. இந்த நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய மூன்று வழிகளைக் கையாளுகின்றான். அவை "இருதம், நியதி, விரதம்" என்று கூறப்படும். இவன் தனது மாயா சக்தியினால் எத்தகைய இயல்புடைய இராக்கதர்களையும் அழிக்கும் ஆற்றல் கொண்டவன். நேர்மை, நீதி என்பவற்றிலிருந்து வழி தப்பியவர்களைத் தண்டிப்பவன். தண்டித்தவர்கள் திருந்திவிட்டால் இவர்களுடைய முன்னோர்கள் செய்த பாவங்களையும் போக்கவல்லவன் திரிகால நிகழ்ச்சிகளையும் அறியும்

தன்மையுடையவன். ஆறு, கடல் போன்றவைகளை தனது ஆணையால் செயல்படச்செய்பவன். இவனைப் பற்றிய சகல தனிப்பண்புகளையும் "வருண சூக்தங்கள்" மூலம் அறியலாம்.

மித்திரன்

இருக்கு வேதத்தில் மித்திரனைப் பற்றிய செய்திகளை ஒரேயொரு சூக்தம் மூலம் அறியலாம். இந்த ஒரு பாடலைக் கொண்டு இவனது குணாதிசயங்களைக் கூற முடியாது. ஆனால் இவன் வருணனோடு கூடியிருப்பவன் என்ற காரணத்தால் ஒரிரு பண்புகளை கூறமுடியும். இவன் தன்னுடைய இமை யிமைக்காதபடி உலக மக்களையும், உழவர்களையும் காப்பாற்றுபவன், சூரியனின் அதிவிரைவான போக்கை கட்டுப்படுத்துபவன். எல்லாவற்றையும் பாதுகாத்துக் கலந்து நிற்பவன் என்ற சிறப்புப் பொருளிலே இவன் "விஷ்ணு" என அழைக்கப்படுகின்றான். அன்பு ததும்பும் இயல்பு கொண்டவன் அதனால் இவனை நண்பன் எனலாம். "மித்திரன்" என்றால் நண்பன் எனவும் பொருள் கொள்ளலாம்.

ஆதித்தர்கள்

இருக்கு வேதப்பாடல்கள் மூலம் ஆதித்தியர்களை பலவாறு அறியலாம் சில பழைய பாடல்கள் ஆறு ஆதித்தர்களைப் பற்றிக் கூறுகின்றன. பத்தாம் மண்டலத்தில் எட்டாவது ஆதித்தன் என "மாத்தாண்டன்" கூறப்படுகின்றான். அதர்வ வேதத்திலும் பிராமணங்களிலும் வருணிக்கப்பட்ட ஆதித்தர்களையே பின்னெழுந்த சமய நூல்கள் போற்றுகின்றன. இருக்கு வேதப்பாடல் ஒன்றில் ஆதித்தர்கள் ஆறுபேர்கள் விளக்கப்படுகின்றனர்கள். அவர்கள் மித்திரன், பகன, வருணன், அம்சன், அர்யமன், தக்ஷன் என்பவர்களாம். பிற்

காலத்தில் சூரியனும் ஆதித்தனாகின்றான் ஆதித்தர்கள் குழுக்களாகவே அமைகின்றார்கள் விண்ணைச்சார்ந்த இவர்கள் தேவர்களின் பண்பும் தன்மையும் பெற்று விளங்குகிறார்கள். இக்குழுத் தெய்வங்களின் தாய் "அதிதி" எனப் போற்று கிறது இருக்கு வேதம்.

சூரியன்

வருணன், மித்திரன் ஆகியோரின் கண் சூரியன் என வர்ணிக்கப்படுகின்றான். இவனது வடிவம் வட்டமாகும். உலகம் முழுவதையும் மறைந்து நின்று கண்காணிக்கின்றான்' பொழுது புலர்தலே இவன் தோற்றத்திற்குக் காரணம். சூரியன் விரைவாக செல்வதற்கு ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட தேர் வழங்கப்பட்டது. இவன் ஆகாயத்தின் "கல்" எனவும் "மணி' எனவும் "படைக்கலம்" எனவும் "சக்கரம்" எனவும் பல கவிகளால் வருணிக்கப்படுகின்றான். இதுவே இவனது தோற்றம். இத்தெய்வத்தின் தன்மைகளை விளக்கும் வேத பாடல்கள் சில உள. மக்களின் சுறுசுறுப்பிற்கும் நன்மை தீமைக்கும் காரணமாகின்றான். நோய்களையும் தீயகனவுகளையும் தீர்க்க வல்லவன். சந்ததி தழைக்கச் செய்பவன். நாட்களைப் பிரித்தறிய உதவுபவன் சூரியன். சந்து அசத்துப் பொருட்களின் தோற்றம் அசைவு என்பவற்றிற்கு அடிக்கல் ஆகின்றான். சர்வ வல்லமை கொண்டவன். அதனால் மக்கள் இவனிடம் சென்று "எங்களைப் பற்றி வருணன், மித்திரனிடம், பாவமற்றவர்கள்" எனக்கூறும்படி வேண்டி நிற்கிறார்கள். இருக்கு வேதத்தில் இவனைப்பற்றிப் பத்திற்கும் அதிகமான சூக்தங்கள் மூலம் அறியலாம்.

பூஷன்

இருக்கு வேதத்தில் இருபதுக்கும் அதிகமான பாடல்கள் "பூஷன்" பற்றிய செய்திகளைக் கூறுவன. சூரியனின் தோற்றத்திற்கும் இயக்கத்திற்கும் இவனே காரணமாவான். சூரியனின் கிரணங்களைத் துணைகொண்டு உலகில் ஒளியைப் பரப்புவான். இரவையும், பகலையும் ஆக்குவான்; நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவான் தன்னுடைய பொன்மயமான கையினால் மக்களை விழித்தெழவைத்து அவர்களை ஊக்குவித்து அருளபாலிப்பான். இறந்தவர்கள் நற்கதியடைய அவர்களை அந்தந்த இடங்களில் சேர்ப்பான். நீதி, நேர்மையைக்கெடுக்கும் அரக்கர்களை அழித்துவிடுவான் - துரத்திவிடுவான். ஏனைய தெய்வங்களும் இவனுடைய ஆணையாற் செயல்படுகின்றனர். மக்கள் இவனை மீறமுடியாது. பூஷனுடைய தனிப்பண்புகளை விட அவனுடைய தோற்றமே அக்காலக் கவிகளால் விளக்கப்படுகின்றன. கால், கை, தாடி, சடைமுடி கொண்டவன் பொன்மயமானவன் ஈட்டி அங்குசம் வைத்திருப்பவன் இவன் மேல்கீம் எனச் செல்வான் மக்களைக் கண்காணிப்பவன் எனக் கூறப்படுகின்றன.

விஷ்ணு

வேதப்பாடல்களில் இவன் மிகச் சிறிய தெய்வமாகக் காணப்படுகின்றான். இக்காலத்தில் சிவனுக்கு அடுத்தபடியாக கூறப்படும் இத்தெய்வம் அன்று ஏழு சூக்தங்களில் மட்டுமே போற்றப்பட்டான். இவனுடைய தோற்றம் ஒளிமிக்கது. நீண்டகன்ற அடிச்சுவடுடையவன். இவனுடைய இரு அடிகளாக விண்ணும் மண்ணும் விளங்குகின்றன மூன்றும் அடி மக்களின் கட்புலனுக்குத் தெரியாத ஒளியாம். இவன் எங்கும் ஏகமாக வியாபித்து நிற்கும் இயல்பினன். மக்களின் எண்ணத்தில் மட்டுமே தென்படுவான் தத்துவக்கருத்திற்கு அடிப்படையாகக் கூட இத்தெய்வத்தின் பண்பினைக் காட்ட

லாம், வேதபாடல்களில் உதயம், நண்பகல், அஸ்தமனம் ஆகிய பொழுதுகளை உருவாக்கியவை. இம்மூன்று நிலைகளை யும் தன்னுடைய மூவடிகளால் கடந்து செல்லும் ஆற்றல் கொண்டவன். மக்களின் நலன் கருதி விஷ்ணுவே சூரியனாக வும் வருகின்றான் என்பர். இந்திரனுக்கும், விருத்திரனுக்கும் அடிக்கடி யுத்தம் நிகழும். இந்தப் போராட்டத்தில் இந்திரன் தனது உதவிக்கு விஷ்ணுவை அழைத்தான என வேதபாடல் ஒன்று கூறுகின்றது. "விஷ்ணு" என்பதன் பொருள் எங்கும் நிறைந்து நிற்பவன் என்பதாம்.

உஷை

இருக்கு வேதப்பாடல்கள் இருபதிற்கும் அதிகமானவற் றால் இவள் போற்றப்படுகிறாள். இயற்கையின் நியதி; ஆகா யத்தின் புதல்வி; சூரியனின் மனைவி என சில கவிகளும், வேறு சிலர் சூரியனைப் பிறப்பிப்பவள் எனத் தெளிந்து சூரியனின் "தாய்" எனவும் இயம்புகின்றனர். இவள் தோன்றியவுடன் குருவிகள் கூட்டிலிருந்து வெளியேறுகின்றன. மக்களும் எழுந்து தமது கடமைகளைச் செய்கின்றனர். இவளே இருக்கு வேதத்தில் தனியுருவம் கொண்ட முதல் பெண் தெய்வமா கத் திகழ்கின்றாள். வேள்வித் தீக்கும் இவளுக்கும் தொடர்பு இருப்பதால் அக்கினியுடன் சம்பந்தப்படுத்தும் பாடல்களும உண்டு இவளுடைய காதலர்களாக அஸ்வினி தேவர்கள். அக்கினி என்போர் காணப்படுகிறார்களெனக் கவிகள் வர்ணிக் கின்றனர் இவளை மக்கள் வழிபடுவதனாற் செல்வம், குழந் தைகள், பாதுகாப்பு, நீண்ட ஆயுள், புகழ் பெருமை என்பன வற்றையெல்லாம் இவள் வழங்குகிறாள். "உஷை" என்பதன் பொருள விடியற்பொழுது எனப்படும்.

இராத்திரி

வேதப்பாடல்களில் இவள் இரவு எனக் குறிக்கப்படு கிறாள் இரவில் நிகழும் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்புள்ளவளா கக் கருதப்படுகின்றாள். அழகுடன் விளங்கும் இவள் அழகுத்

தெய்வமாகவும், தாரகைகளுடன் தோன்றுபவளாகவும் அமைகின்றாள். தீயசெயல்கள் நிகழ விடாது, மக்களையும் புல்லினங்களையும் காப்பாற்றுபவள். திருடர்களையும் கொடும் விலங்குகளையும் தண்டித்து, மக்களை நல்வழிப்படுத்துபவள். இருபதிற்கும் மேற்பட்ட சூக்தங்கள் இவளை உஷையுடன் சேர்த்துப் போற்றுகின்றன. "நக்த்தம்" என்ற பெயர்கொண்டு விளங்குபவள் இவளே.

அஸ்வினி தேவர்

இத்தெய்வங்கள் இரட்டையர்கள் என அழைக்கப்படுவர். அறுபது சூக்தங்கள் மூலம் இத்தெய்வங்கள் போற்றப்படுகின்றனர். இவர்கள் சூரியனைப்போல, ஒளியையும் அருளையும் கொண்ட தெய்வங்கள். இவர்களுடைய தேர் குதிரைகள் சிறகுகளைக் கொண்டவை. மதுவின் மீது அளவுகடந்த விருப்பம் உடையவர்கள். அதனால் சோமபானத்தைப் பருகுபவர். இவர்களுடன் உஷை, சூரியை ஆகிய இருவரும் சேர்ந்தே பருகுவர். இவ்விரட்டையர்கள் குதிரை வீரர்கள் என்றும் அழைக்கப்டுவார்கள். இந்த அசுவினி தேவர்கள் மக்களுக்குக் கை கால்கள் பழுதடைந்தால் வைத்தியம் பார்ப்பவர்களாகவும் வர்ணிக்கப்படுகிறார்கள். முதியவருக்கு கண்பார்வையையும், இளமையையும் நல்குபவர்கள், கடலிற் சென்ற "புஜ்யு" என்பவரின் துன்பத்தினைப் போக்கியவர்கள் என்ற வரலாறு கூறப்படுகின்றது. கிரேக்க நூல்களில் கூறப்படும் குதிரை வீரர்களின் வரலாறு இவ்வசுவினி தேவர்களுடன் தொடர்புபடுவதைக் காணலாம்.

இந்திரன்

இவன் விண்ணுக்கும், மண்ணுக்கும் இடைப்பட்ட தெய்வங்களிலே தலைசிறந்தவன். "தியௌ" இவன் தகப்பன் எனவும் சில பாடல்களில் "துவஷ்டா" தந்தையெனவும் அக்கினி, பூஷன் இருவரும் சகோதரர்கள் எனவும் வர்ணிக்கப்பட்

டுள்ளான். இந்திரன் வீரச்செயல் புரிவதற்குரிய சக்தியைப் பெறுவதற்காகச் சோமரசம் அருந்துபவன், வச்சிரந்தடக்கை யுடையவன், "வச்சிரம்" என்ருல் இடியைக் குறிக்கும், வேத பாடல்கள் அரைப்பங்கிற்கு மேலாக இவனுடைய பெருமை கள் கூறப்படுகின்றன, இவன் மருத்துககள், அக்கினி, வரு ணன் வாயு சோமன். பிருகஸ்பதி, பூஷன், விஷ்ணு என்போ ருடன் தொடர்புடையவன் என விதந்துரைக்கப்படுகிருன். "விருத்திரஹா" எனப்பெயர்பெற்ற இவன் விருத்திரனை அழிப்பதற்கு அக்கினி, சோமன், பூஷன் இவர்களைத் துணைக்கு அழைத்தான், அசைந்து செயற்பட்ட மலைகளை நிலையாக அசையாது அமர்ந்திருக்கும்படி செய்தவன் இந்திரனே,

பர்ஜனியன்

இவனைப்பற்றி இருக்கு வேதத்தில் மூன்று பாடல்கள் மட்டுமே உள்ளன. "பர்ஜயன்" என்ருல் மழைபொழியும் மேகம் எனப்பொருள்படும். இத்தெய்வம் இடி, மின்னல் என் பவற்ருேடு தொடர்புடையது. நிலத்தை வளம் செய்பவன்; நிலம் இவன் மனைவி; ஆகாயத்தின் மகன்.

உருத்திரன்

மின்னலை அம்பாகக் கொண்டு ஏவி அழித்தலையும் வழி படும் மக்களைக் காப்பதில். அருளலையும் கொண்டு விளக்கும் "இவனை இருக்கு வேதம் மூன்று பாடல்கள் மூலம் விளக்கு கிறது. "சுபம்" மங்களம் நிறைந்தவன் என்பதால் பிற்கால புராண இதிகாச நூல்களிலும் தமிழ் இலக்கியங்களிலும் மேலான இடத்தைப் பெறுகின்ருன் உருத்திரன் என்ற பெயர மாறி, மறைந்து சிவன் என்ற நாமம் பிற்காலத்தில் பெரி தும் பயன்பட்டுள்ளது.

மருத்துக்கள்

முப்பத்திரண்டு பாடல்களில் இவர்கள் வர்ணிக்கப்படுகின்றார்கள். மருத்துக்கள் உருத்திரனின் மைத்தர்களென அழைக்கப்படுகின்றார்கள். சில பாடல்களில் இவர்களின் தொகை என்பத்தொன்பதின்மர் எனவும் நூற்றெண்பதின்மர் எனவும் கூறப்படுகின்றது. நிறைந்த அணிகலன்களை யுடையவர்கள், இவர்கள் பயன்படுத்தும் ஆயுதங்களாகக் கோடாரிகள், அம்பு வில்லுகள் பயன்பட்டன. சிறந்த வைத்தியர்கள் எனவும் நீரைப்பொழிந்து நோயைத் தீர்ப்பவர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர், "மருத்துக்கள்" என்றால் நசுக்குபவர்கள். பிரகாசிப்பவர்கள் எனப் பொருளுண்டு.

ஏனைய தெய்வங்கள்

காற்றுத் தெய்வமாக "வாயு" போற்றப்படுகிறது. இது பர்ஜன்யனுடன் தொடர்புடைய தெய்வம். புகழ், சாந்தி, செல்வம் வழங்குவதில் சிறந்தவன். நீர்த்தெய்வமாக "அப்பு" கருதப்படுகின்றான். கொடுமை, கோபம், பொய் முதலிய தீய குணங்களை நீக்கி ஆரோக்கியம், நீண்ட வாழ்வு, செல்வம் என்பனவற்றினை அப்பு எனும் தெய்வம் அளிக்கிறது. 'பிருதிவி' பெண் தெய்வமாகப் போற்றப்படுகிறது. அக்கினி மூன்றுலக தெய்வங்களுடன் தொடர்புடையவன். யாகங்களில் கிரியைகளில் இவனே முதலிடம் பெறுபவன். எல்லாத் தெய்வங்களுடன் தொடர்பு கொண்டு மக்கள் விரும்பும் தேவைகளை விரைவில் தீர்ப்பவன். தெய்வங்களின் புரோகிதன் எனவும் இவன் வர்ணிக்கப்படுகின்றான். "ஹோதா" என்ற சிறப்புப்பெயர் பெறுபவன் இவனே. "பிரகஸ்பதி" என்ற தெய்வத்தின் மீது பதிெருரு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சகல வல்லமையும் இத்தெய்வத்திற்கு உண்டு. பிற்காலத்தில் இவனே பிரமாவாகக் கருதப்பட்டவன். இவர்களே இருக்கு வேதப் பாடல்களிற் போற்றப்பட்ட தெய்வங்கள் ஆவர்.

இயல் நான்கு

இருக்கு வேத கால பொதுவான அம்சங்கள்

இருக்கு வேத இலக்கியத்தின் மூலம் அக்கால அரசு, சமூகம், மக்கள்வாழ்க்கை, கல்வி, தொழில், சாதிப்பாகுபாடு, பொழுதுபோக்கு என்பவற்றையறியலாம். சமஸ்கிருதச்சொல்லாகிய ''ராஜா''வின் குறிப்பு அடிக்கடி வருததால இந்த ராஜாவே அரசனாக இருந்திருக்கலாம் என ஊகிக்க முடியும். இத்தலைவனை ''விஸ்பதி'' எனவும் கூறுவர். விஸ் என்றால் மக்கள், பதி என்றால் தலைவன் எனப் பொருள் கொள்ளலாம். மக்கள் தலைவனாக "விஸ்பதி" போற்றப்பட்டிருக்கின்றான்.

பரம்பரை ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டவன் விஸ்பதி. இவ்வரசு பற்றி ஆதாரம் முழுமையாக இல்லாதபோதும் சில குறிப்புக்களைக் கொண்டு ஊகித்தறியலாம். அக்குறிப்புக்களாக சுதாஸன், கிரிஷித்து, குருசிரவணன், பிஜவனன் போன்ற அரச பரம்பரைகள் அமைகின்றன. இந்த அரசர்கள் மக்களைக் காப்பதே கடமையாகக் கொண்டவர்கள். இவர்கள் வசிக்கும் இடம் மாளிகையாகும். பளபளக்கும் உடையணிந்தவர்கள். அரசோச்சுவதற்காக மக்களிடம் பொருட்களைப் பெற்றனர். இவர்கள் பகைவர்களிடம் ஆடு, மாடு, அடிமைகள் போன்றவற்றினைக் கவர்ந்தும் வந்தனர்.

படைகளைத் திரட்டுவதற்குச் ''சேநாநி'' முக்கியத்துவம் வாய்ந்தவன். இவனை அரசனே தெரிவு செய்து நியமிப்பான். திரட்டிய படைகளைச் சிறியதாக்கி கிராமங்களைப் பாதுகாப்பதற்கென அமைக்கப்பட்டவன் ''கிராமணி'' யாவான். சேநாநி, கிராமணி என்பவர்களுடன் புரோகிதனையும் அரசனே தெரிவு செய்தான். போரிலே வீரம் விளைத்து வெற்றிகொள்வதற்குப் புரோகிதனின் மந்திர உச்சாடனங்கள் உதவின. இதனால் புரோ

கிதன் அரச குடும்பத்தில் அங்கத்துவம் பெறுகின்றான். குடும்பத்தில் ஒருவன் என்பதால் வெற்றியின் காரணமாகச் சில பொருள்களைப் பரிசாகப் பெற்ற சம்பவத்தினை தானஸ்துதிகள்" மூலம் அறியலாம்.

நாட்டைப் பாதுகாக்கும் அரசன் தன் எண்ணப்படி செயல்பட முடியாது. கிரேக்க நாட்டிலேதான் முதல் முதலில் ஜனநாயக அரசு தோன்றியது. இந்நிலைக்கு முன்பே வேத இலக்யகிங்களிலே, அரசகருமம் பற்றிய குறிப்பைக் காணலாம். மக்களின் குரல் எழுகின்றது. இதற்கெனத் தனிக்குழுவினர் இருந்தனர். இக்குழு ''சமிதி'' என்றும் ''சபா'' என்றும் அழைக்கப்பட்டது. சமிதி என்பது மக்களாலே தெரிவு செய்யப்பட்ட அங்கத்தினரை யுடையது என்றும், சபா என்பது நாட்டின் முக்கிய பிரமுகர்களைச் சேர்ந்திருப்பது என்றும் மேல் நாட்டறிஞர்கள் அறைகுவர். சேனைகளை நடாத்துவதற்குச் சேநாநி முக்கிய இடததைப் பெறுகின்றான். கிராமங்களை நிர்வகிப்பதற்குக் கிராமணி அரசனுக்கு அவசியமாகின்றான். வெற்றிகளையும், செல்வங்களையும். மந்திரங்களின் உச்சாடனங்காளற் மன்னன் பெற வேண்டுமென்ற கருத்துடன் புரோகிதனும் அரசனுக்கு உதவுகின்றான். மேலும் நாட்டின் நலன்களையும் நடப்புக்களையும் அறிவதற்கு ''ஒற்றன்'' என்பவனையும் அரசன் தனது நேரடிப்பார்வையில் வைத்திருந்தான். வேதஇலக்கியங்களின் குறுகிய ஆதாரங்களை அடிப்படையாக வைத்து ''அரசு'' நிலையை ஊக அடிப்படையிலேயே விளக்க முடியும்.

இருக்கு வேத காலத்தில் மக்கள் வாழ்க்கை எப்படியிருந்தது என்பதனை ஊகித்தறியலாம். இதற்கு இவ்வேதத்தில் வரும் ''சுனஸ்சேபன்'' கதைனய ஆதாரப்படுத்தலாம். அக்கால சமூகம் குடும்பம் குடும்பமாக இயங்கியது. சமூகத்திற் கட்டுப்பாடு. மிக முக்கியம் ''விருந்தோம்பல்'' மிகச்சிறப்பாக விளங்கியது. தாம் வணங்கிய அக்கினியை ''அதிதி'' என்ற சிறப்பு நாமம் இட்டழைத்தனர். விருந்தாளிகளைப் பேணும் வழக்கம் விரிவடைந்து, இல்வாழ்வான் ஆற்றவேண்டிய கடமைகளுள் ஒன்றாக்கப்பட்டது. பிற்காலத்தில் வள்ளுவர் இக்

கருத்தைக் கையாண்டு விருந்தினன் செய்ய வேண்டிய ''பஞ்சயந்நம்'' (ஐந்து வேள்வி) களுள் ஒன்ருக ''விருந்து'' தனியிடம் பெற்றமையும் உணரலாம்.

இருக்கு வேத காலத்தில் காணப்படும் சாதிபற்றிய கருத்துக்களை யெண்ணும்போது, பிற்கால சாதிப்பாகுபாடு எத்தகையது என்பதைக்காட்ட முடியும். இருக்கு வேதப் பாடல் ஒன்றில் "பிராம்மணக, ராஜ்ச்சியக,வைசியக, சூத்திரக''எனும் சொற்களைக் காணலாம். திவ்விய புருஷனுடைய நான்கு உறுப்புக்களான முகம், தோள், தொடை, பாதம் முதலியவற்றுடன் முறையே பிராமணன், க்ஷத்திரியன், வைசிகன், சூத்திரன் ஆகியோர்கள் தொடர்பு பெற்றுள்ளார்கள். இருக்கு வேதத்தில "புருஷசூக்தம்" பத்தாம் மண்டலம் தவிர, வேறு எந்தப் பகுதியும் சாதிப்பாகுபாடுபற்றிப் பேசவில்லை. இருக்கு வேத காலத்தில் நாட்டு நலன் கருதியே சாதிப்பாகுபாடுஉருவாக்கப்பட்டது, தெய்வங்களால் ஏற்படும் தீய செயல்களை அகற்றும் பொருட்டு பிராமணனும், பகைவர்களிடமிருந்து நாட்டைப் பேணும் பொருட்டு க்ஷத்திரியனும், நாட்டில் ஏற்படும் பஞ்சத்திலிருந்து மக்களைக் காத்தற் பொருட்டு வைசிகனும், மூவருக்கும் உள்ள கடமைகளைச் சீராக்கும் நோக்குடன் உதவிபுரிவதற்கெனச் சூத்திரனும் பிரிக்கப்பட்டனர்.

சமூகத்தில் பல்வேறு தொழில்கள் செய்யப்பட்டமைக்குச் சான்றுகள் உண்டு. உழவுத் தொழில், வைத்தியத் தொழில், கைத்தொழில் ஆகிய தொழில்களை அக்கால மக்கள் ஆற்றியிருந்திருக்கிருர்கள். தொழில் ரீதியில் எந்தவிதமான ஏற்றத் தாழ்வுகளும் காட்டப்படவில்லை. வேதபாடல் ஒன்றில் ஒருவன் கவி; ஒருத்தி மா அரைப்பவள்; இன்ஞெருவன் நோய்தீர்க்கும் மருத்துவன் எனக்கூறப்படுவதிலிருந்து வெவ்வேறுபட்ட தொழில்களைச் செய்தார்களெனப் புலப்படுகிறது. இருக்கு வேதகால வர்ணப்பாகுபாடு பிற்காலத்திலே தொழிலடைப்படையிலும், பண்படிப்படையிலும், விரிவடைந்து இன்று இந்தியா முழுவதிலும் பரவிப் பிறப்புக்கள் பற்றியதாகப் பிரிக்க வேண்டிய நிலையையெய்திருக்கிறது.

இருக்கு வேத கால கல்விமுறையில் எழுத்துக்கலை, மொழிக்கலைபற்றிய குறிப்புக்களைக் காணமுடியாது. தவளைகள் கத்துவதனை வேதங்களை உரக்க ஒதுவதுடன் ஒப்பிட்டுக் கூறும் பாட்டும்; பிரமச்சாரி சூக்தம் என்ற வேறொருவகைப் பாட்டும் உண்டு. இவ்விரண்டு பாட்டுக்களையும் ஆதாரமாகக் கொண்டே அக்காலக் கல்வியின் நிலையைக் கூற முடியும். இவற்றைத் தவிர கல்வி பற்றிய செய்தியைக் காணமுடியாது. வேதங்களை செவி வழியாகக் கேட்டுவந்ததே தவிரப் பொறித்து வைத்ததற்கு ஆதாரம் எதுவும் இல்லை. சங்கீதக் கலை தோன்றி வளர்ச்சி பெற்றமைக்கு அறிகுறிகள் உண்டு. இசைக் கருவிகளான வீணை, ஊதாங்குழல் என்பன உபயோகிக்கப் பட்டமைக்கான குறிப்புக்கள் இடம் பெறுகின்றன.

வேத காலத்தில் மக்கள் அணிந்த அணிகலன்களைப் பற்றியும், போருக்கு உபயோகிக்கப்பட்ட கருவிகளைப் பற்றியும் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இருக்கு வேதகால மொழியமைப்பை நோக்கும்போது கவிகள் தாம் கூற விரும்பிய கருத்துக்களைத் தெளிவான நடையிற் கூறியுள்ளார்கள். இங்கு கையாளப்பட்ட நடை மிகவும் எளிய நடை. உவமையணிகளையும், எண்ணிறந்த வினையுருவங்களையும் இங்கு காணலாம். இவை முற்றுக்கள், எச்சங்கள் எனப் பலவகைப்படும். வேற்றுமைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சொற்கள் இரட்டித்தும் வருகின்றன. யாப்பு முறைகளில் ''விருத்தங்கள்'' முதலிடம் பெறுகின்றன.

இருக்கு வேத காலச் சமயநிலை

இந்திய இலக்கியங்கள் பெரும்பாலும் சமயச்சார்புடையனவே. இந்தியாவிலே சமய உணர்வே மிகச்சிறந்தது எனக் கொள்ளப்பட்டது சமயக் கருத்துப்பட எல்லாவற்றையும் நோக்குவதே சிறந்தது. ஞானிகள், எழுத்தாளர்கள் அனைவரும் தம்முடைய உணர்விற் சமய நம்பிக்கைக்கே முக்கியத்துவம் கொடுத்தார்கள். கணிதம், விஞ்ஞானம்; வானியல், சோதிடம் ஆகிய நூல்களும் சமயக்கருத்துக்களைச் சார்ந்தனவாகவே விளங்கின, முதன்முதலில் எழுந்த வேத இலக்கியங்களிலும் இந்தச் சமய உணர்வே சிறப்பிடம் பெற்றிருக்கிறது. இந்து சமயத்திற்கு ஆதாரமாக அமைந்துள்ள இந்நூல்கள் வழிபடும் தெய்வங்களுக்கும், வழிபாட்டு முறைகளுக்குமே சிறப்பினை வழங்கியுள்ளன.

வேத இலக்கியங்களில் முதன்மையானது இருக்கு வேதமே! இவ்வேதத்தில் முன்கூறப்பட்ட, ஏராளமான தெய்வங்களும் பலவிதமான தோத்திர வழிபாடுகளும் சிறந்து விளங்கின. சமயக் கருத்துக்களைப் பார்க்கும்போது இருக்கு வேதத்தில் ஆரம்பகால மனிதன் தெய்வ வழிபாட்டிற்கு அச்சத்தையே அடிப்படையான காரணமாக இருந்திருக்கலாம்; இந்தப் பயமே தெய்வம். பய உணர்வினை எந்தச சக்திகள் ஏற்படுத்துகின்றனவோ அந்தச் சக்திகளையெல்லாம் தெய்வங்களாக வணக்கியிருக்கலாம். மாக்ஸ் மூலர் முற்கூறப்பட்ட மூன்று முறையில் தெய்வங்களை பிரித்து விளக்குகிருர்.

பல தெய்வங்களைப்பற்றிய செய்திகளை முற்பட்ட வேதங்கள் கூறுகின்றன. இத்தெய்வங்களை வழிபடும் மனிதன் மிகப்

பணிவாக தமக்கு வேண்டிய பொருட்களைக் கேட்டுப் பெற்றுக் கொண்டான். இம்முறை மிக இலகுவாகக் காணப்பட்டது. அதாவது தம்மிடமுள்ள பொருட்களைக் கொடுத்து, தமக்கு வேண்டியவைகளைக் கேட்டான். இது ''பண்டமாற்று'' முறை. இம்முறை வேத கால சமய மரபில் காணக்கூடியதாகவுள்ளது. ''நான் உனக்கு நெய் முதலிய ஆகுதிகளைத் தருகின்றேன். நீ எனக்கு வீரர்களான மக்களையும், செல்வங்களையும், மழையையும், நீண்ட ஆயுளையுந்தா'' இதனையே வழிபடுவோர் தெய்வங்களிடம் கேட்டனர் இவ்வண்ணம் கேட்ட முறைமையே கிரியைகள் ஆகின. இக்கிரியைகளை ஒரு தெய்வத்திற்கு ஆற்றினர் எனக் கூறமுடியவில்லை. பல தெய்வங்களிடம இக்கிரியைகளை யாற்றியுள்ளார்கள், இதனால் இக்காலம் ''கிரியை நெறிக்காலம் எனவும் ஒரு தெய்வமுமின்றி பல தெய்வங்களைப் பேணி வழிபட்டமையாற் ''பல தெய்வ வழிபாட்டுக் காலம்'' எனவும் அழைக்கப்பட்டது. பல தெய்வ வழிபாட்டு முறைமையை ஆங்கிலத்தில் 'பொலிதீயிசம்'' (Polytheism) என்றழைப்பர்.

வேத பாடல்களில் இடம்பெற்ற மற்றொரு பகுதியைப் பார்க்கும் போது எளிமையான வணக்க முறைமை மாறி உரிமையான வணக்க முறையுள்ளதைக் காணலாம். பல தெய்வங்களைக் கிரியை மூலம் வணங்கிய மனிதன் தம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் குறிப்பிட்ட ஒரு தெய்வத்திற்குப் பெரிய அளவில் ''வேள்விகள்'' பலவற்றைச் செய்தான். அதனாற் பல தெய்வத்திற்குப் பதிலாக ''ஒரு தெய்வ வாதம்'' வலுப்பெற்றது. ''ஒரேயொரு தெய்வமேயுள்ளது' என்ற கொள்கை ஆங்கிலத்தில் ''மொனோதிஇசம்'' (Monotheism) எனப்படும். இக்கொள்கையை 'மாக்ஸ்முல்லர்'' என்பவர் "ஹெனோதீயிசம்" (Henotheism) என்றார் இவ்வாறு கிரியை நெறிமாறி வேள்விமுறை விரித்தியடைந்தது. இவ்வேள்வி முறையை விவரித்து, விளக்கிக் கூறுவதற்கென்றே தனி நூல்கள் பல தோன்றின. அவையே ''பிராமணங்கள்'' எனப்பெற்றன.

அக்கால மக்களின் சிந்தனை வளர்ச்சி, பிற்காலத்தில் அது பொக்கிஷம் எனப் போற்றப்பட்டது. போகப்போக இந்த ஒரு தெய்வக் கொள்கையிலும் மாற்றம் ஏற்பட்டது. தெய்வம் என்ற சொல் கைவிடப்பட்டு "மூலமாகவுள்ளது ஒரேயொரு பொருள்" என்ற கொள்கை வலியுறுவதைக் காண்கிறோம். ஒரு பொருள் மட்டுமேயுள்ளது என்ற கொள்கை விருத்தியடைந்தது. இதனை ஆங்கிலத்தில் மொனிசம் (Monism) எனப்பட்டது. இக்கொள்கையினைப் பற்றிய செய்தி வேதத்தில் ஓரிடத்தில் "நாங்கள் எங்கள் பலியை எத் தெய்வத்திற்கு இடுவோம்" என்ற வினா ஒன்பது தடவை பட்டதையும், அதற்குப் "பிரஜாபதியே எல்லாவற்றிற்கும் தலைமையானவன் அவனுக்கே பலியை இடக்கடவோம்" என்ற பதில் கொடுக்கப்பட்டதையும் காணலாம். இதற்கு மேலாக வேத சுலோகம் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது. 'ஒன்று தான் உள்ளது அதனை அறிஞர்கள் அக்கினி என்றும். யமன் என்றும் வெவ்வேறு பெயர் குறிக்கின்றனர்" என்பதாகும் அது "ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி என்ற சுலோகமேயாகும். இச்சமய நிலையே பிற்பட்ட கால உபநிஷத சிந்தனைக்கு உரம் பயில்வன

இயசூர் வேதம்

இயசூர் வேதம் நூற்றொரு சாகைகளை உடையது அவற்றுள் இதுவரை கிடைத்துள்ளவை மூன்று சாகைகளே. அவையாவன கண்ணுபசாகை, மைத்திரிய சாகை, மாத்தியந்தின சாகை என்பவையாம். இவ்வேதம் உரைநடையிடையிட்ட பாட்டுக்களால் அமைந்துள்ளது. இது கிருஷ்ணயசூர், சுக்கிலயசூர் என்று இருவகைப்படும். கிருஷ்ணயசூர் எனும் பகுதியை ''வைசம்பாயனர்'' தொகுத்தார்; சுக்கிலயசூர் எனும் பகுதியை "யாக்ஞவல்லியர்" தொகுத்தார். விஷ்ணு புராணத்தில் யசூர் வேதம் நூற்றொரு சாகைகளை உடையது எனக் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் ''வாஜசநேயிசாகை"இருபத்தேழு உள்ளன. பௌதாயனர் தாமியற்றிய கிருஹிய சூத்திரத்தில் யசூர் வேதம் சௌமியம், ஆக்நேயம், வச்வதேவம் பிரஜாபதி எனும் நான்கு காண்டங்கள் உடையது என்பர்

''வாஜசநேயிசாகை''யில் இருப்பன மந்திரங்களே; மந்திரங்களை ஓதத் தகுதியுடையவர்கள் புரோகிதர்களே இப்புரோகிதர்களின் முக்கியத்துவத்தினைக் கொண்டே யசூர்வேத மந்திரங்கள் எழுந்தன. இவ்வேதம் கிரியைகள், யாகங்கள ஆற்றுவதற்குரிய விதிமுறைகளை விளக்குகிறது. கிரியைகளுக்கு மந்திரம் முக்கியமானது; மந்திரங்களுக்கு உச்சரிப்பு முக்கியமானது. உச்சரிப்புக்குப் புரோகிதர்கள் முக்கியமானவர்கள் எனக் கூறப்படுகின்றது.

இதன்கண் இந்திரன், விசுவரூபன், பிரஜாபதி உருத்திரன் ஆகிய தெய்வங்கள் போற்றப்படுகின்றன. தேவர், அசு

ர் எனும் இருதிறத்தார்க்கும் இடையிலே எழுந்த இகல்பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. இதெய்வங்களைப் பற்றிய உரைகள் பிற்காலத்தில் "பத்ததிகள" ஆக உருப்பெற்றன. யாகங்களில் தலைசிறந்தவை "அசுவமேதமும்", 'ராஜசூயமும்" ஆகும். நாற்பது உட்பிரிவுகளால் அமைந்தது இவ்வேதம்.

நாற்பது உட்பிரிவுகளில் இறுதியில் வரும் பதினைந்து உட்பிரிவுகள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவையாகக் கூறப்படும். இருபத்தைந்து உட்பிரிவுகளிலும் யாக மாற்றும் முறை பற்றியும், உச்சரிப்புக்கள் பற்றியும் பேசப்படும். மூன்ருவது பிரிவில் நித்தியாக்கினி தோத்திரமந்திரங்கள் இடம்பெறுகின்றது. மேலும் நான்கு மாதங்களுக்கொருமுறை நடைபெறும் "சார்மாஸ்யம்" எனும் கிரியை பற்றிக் கூறப்படும், சோமயாகத்தில் ஆற்றப்படும் கிரியைகளும், மந்திரங்களும் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. பதிஞேராம், பதினெட்டாம் பகுதிகளில் யாகமாற்றும் முறையையும், ஓமகுண்டம் அமைக்கப்படும் விளக்கமும் கூறப்பட்டுள்ளன. அன்னப்பட்சியின் சிறகு வடிவில் இவை அமைக்கப்பட வேண்டும். இருபத்தைந்தாம் உட்பிரிவில் அசுவமேத யாகத்தில் கூறப்படும் விடயததைக் காணலாம்.

"மந்திரம்" என்பதன் பொருள் உச்சரிப்பவனைக் காப்பாற்றுவதாக என்பதாம். யசூர் வேதத்தின் தலைசிறந்த பகுதியாகக் கருதப்படுவது தைத்திரீய சங்ஹிதையாகும். இச்சங்கிதையில் உருத்திரனைப்பற்றிக் கூறப்படும் பகுதி "சதருத்ரீயம்" ஆகும். பத்தொன்பதாம் பிரிவு முதல் இருபத்தோராம் பிரிவுவரை "சௌத்ராமணி" யாகத்திற்குள்ள மந்திரங்களும், அந்த யாகத்தைப்பற்றிய விபரமும் கூறப்பட்டுள்ளன.

பதினைந்து உட்பிரிவுகளும் காலத்தினல் பிந்தியவை. இதனல் இப்பகுதிகளைக் "கிலங்கள்" எனக்கூறுவர். 'கிலங்கள்' என்ருல் கூறுபந்தங்கள் என்பது பொருள். இருபத்தாரும் பிரிவிலிருந்து, இருபத்தொன்பதாம் பிரிவுவரை உள்ள விடயங்கள் ஏனையவற்றின் பின்னிணைப்பாகவே காணப்படுகின்றன. முப்பதாம் பிரிவில் மந்திரங்கள் எதுவும் கூறப்படவில்லை இப்பிரிவில் பலியிடுபவர்கள் பலியிடப்படுப

வர்கள் என்பவரினது விடயங்கள் கூறப்பட்டுள்ளன. முப்பத்தி யோராம், முப்பத்திரண்டாம் பிரிவுகள் உபநிடதங்கள் என்ற பெயரில் விளங்குகின்றன. முப்பத்திரண்டாம் பிரிவு முதல். முப்பத்ினுன்காம் பிரிவுவரை உள்ள பகுதிகள் ''சர்வமேதம்'' என்கின்ற யாகம் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.

முப்பத்தினுன்காம் பிரிவில் முதலுள்ள ஆறு பாடல்கள் "சிவசங்கல்ப" உபநிடதங்கள் எனப்பெயர் பெற்றுள்ளன. முப்பத்தைந்தாம் பிரிவில் இருக்கு வேதபபாடல்கள் இருப்பதைக் காணலாம். இவை அந்திமக கிரியைகளைப்பற்றி கூறப்படும் மந்திரங்களை அடக்கியுள்ளன. முப்பத்தோராம் பிரிவிலிருந்து முப்பத்தொன்பதாம் பிரிவுகள் வரை ''பிரவாக கியம்'' என்னும்கிரியைகள் விளக்கப்படுகின்றன. நாற்பதாம் பிரிவில் காலத்தாற்பிந்தியதுவும்,மிக முக்கியமானதுவுமாக விளங்கும் ''ஈசோபநிடதம்'' அமைந்துள்ளது. இந்நாற்பது பகுதிகளுமே 'வாஜசநேயி'இல் காணப்படுவனவாகும் இந்தப் பகுதிகள் யாவும் சுக்கில யசூர் வேதத்தில் அடங்கியுள்ளவை.

கிருஷ்ண யசூர் வேதம் வேள்வியில் மிகப்பயன்படும் மந்திரங்களைக் கொண்டமைந்த பகுதியாகும். இவை "யசூஸ்'' எனப் பெயர் பெறலாயின. ஓசை நயம் மிக்கன; இருக்கு வேதப் பாடல்களில் இருந்தே இவை எடுக்கப்பட்டவையாகும். இந்தப் பாடல்களெல்லாம் அப்படியே பயன்பட்டன. எனவும் கூறமுடியவில்லை. அதில் யாகங்களுக்குத் தேவையான மந்திரங்களை மட்டுமே சங்கிதைகளில் சேர்த்துள்ளார்கள். இச்சங்கிதை கிருஷ்ண யசூரில் மிகவிரிவாக விளக்கப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக ''இது அக்கினிக்கு உரியது''; "அக்கினிக்கு நன்மையுண்டாகட்டும்"; ''நான் சொரியும அவி குறிப்பிட்ட தெய்வத்தைச் சாரட்டும்"; ''இது எனக்கன்று" என வரும் வாக்கியங்களால் அறியலாம்.

இவை மட்டுமல்லாமல் இங்கு சில நொடிகளும் இடம் பெற்றுள்ளன. உயரிய தத்துவங்களை அவை விளக்குகின்றன. இந்தப் பகுதியை ''பிரயோத்தியம்" எனக்குறிப்பிடுவர், ''பிரமோத்தியம்'' எனும் சொல் பிரமத்தைக் கூறும் பகுதியெனப் பொருள்படும். இவைகளே பின் பிராமணங்களிலும் உபநிடதங்களிலும் தத்துவக்கருத்தாயின எனலாம். இப்போது நிகழும் கிரியைகள் யசூர் வேதத்தோடு நெருங்கிய

தொடர்புடையன. இதுவே முன்கூறப்பட்ட "சதருந்திரியம்" எனப் பெயர் பெற்ற "ஸ்ரீ ருத்திரம்" ஆகும். இங்கு உருத்திரனின் நூறு பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. உருத்திரன் "கரியகண்டம்" படைத்தவரும். கணக்கற்ற கண்கள் உடையவரும் வேண்டியவற்றை அளிப்பவருமான பரமேஸ்வரருக்குத் "தோத்திரம்" எனப் போற்றப்படுகின்ருன். அது ("நமஸ்து நீல்க் ரீவாய ஸஹஸ்ராக்ஷாயமீடுஷே")என்பதாகும்.

யசூர் வேதத்தில் சிறப்பியல்பு கொண்ட மந்திரங்களும் உண்டு. இவை பலவகை நன்மைகளையும், தீமைகளையும் விளைவிக்கும் ஆற்றல் உள்ளவை. சில ஒரு அட்சரத்தாலும், இரண்டு முதலாய மூன்று அட்சரங்களாலும் ஆனவை. இவை கவர்ச்சிகரமாக உச்சரிப்பவர்களின் உணர்ச்சிக்கு மட்டுமே விளங்கும். ஆனல் அவை ஆற்றல் மிக்கவை. இவை யாகங்களிலே ஓதப்படுவன. யாகத்திலே அக்கினிக்குச் சொரியும் ஆகுதிகளை இடும்போது "ஸ்வாஹா" எனும் ஒலியெழுப்பப்படும். "ஓம்" எனும் பிரயோகம் பல அர்த்தங்கள் கொண்டு இன்றுவரை தெய்வீகமாகப் போற்றப்பட்டு வருகின்றது. இவை மட்டுமன்றி "வஷட், வேட், வாத்" என்பனவும் "வம், சம், ரம், சாம், வாம்" என்பனவும் சிறந்த "பீஜங்கள்" ஆக வழங்கப்படுகின்றன. இவை விசேடமாகக் கூறப்படுவது என்ற கருத்தை உணர்த்துவதால் "வியாகிருதி" எனப்பெயர் பெறுகின்றன. அவை பூக, புவக, சுவக என்பன. இவை இல்லையேல் வேள்வியும் இல்லை. கிரியையும் இல்லை என வேதங்கள் இயம்புகின்றன.

யசூர் வேதம் சமய நூல்களில் தனி இடம் பெறுகின்றது. இந்திய சமய நிலையின் தொடக்கத்தை நன்கு விளக்குகின்றது. உலகச் சமய நூல்களின் தொடக்க நிலைக்கும் இதுவே பொது நூல். அதாவது சமய வரலாறு, தெய்வங்களை வழிபட உதவும் மந்திரம் என்பவைகளை அறியத் தருகிறது. பிற்கால தத்துவ நூல்களைச் செவ்வனே விளக்க வேண்டுமாயின் இவ்வேதத்தினை நன்ருகக் கற்க வேண்டும். யசூர் வேதத்தினை விளங்கிக் கொண்டாலே பிராமணங்களை விளங்கலாம். பிராமணங்களை விளங்கிக்கொண்டாலே உபநிடதங்களைக் கற்கலாம். உபநிடதங்களை நன்கு கற்றறிந்தவர்களே தத்துவக் கருத்தறிய வல்லவராவார்கள்.

சாம வேதம்

சாமம் இசை பற்றி எழுந்தது. இதில் இசை நுணுக்கம் விளக்கப்படுகின்றது. ஓசை இனங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் "ஏகசாமி", "பகுசாமி" என இருவகைஇசை பேசப்படும். ஒத்த இசை கொண்ட இசைப்பாக்கள் யாவும்ஏகசாமியின் பாற்படும்; பல்வேறு நடைகொண்டவையாவும் பகுசாமியில் காணப்படும். சாமசங்கிதைகள், புராணங்களிலே பலவகை இருந்தனவெனக் கூறப்படும். அவற்றுள்ளும் ஆயிரம் உண்டென அறிஞர் அறைகுவர். இவைகளுள் மூன்று சாமசங்கிதைகளே எமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள் இரண்டே தெளிவுடையன, அவை "கௌதும சாமசங்கிதை, தலவாகர சாம சங்கிதை என்பவையாம். இந்த இரண்டிலும் பிரசித்துபெற்று விளங்குவது "கௌதம சாமசங்கிதையாகும்". இது இரு பிரிவுடையது. அதில் ஒன்று "அர்ச்சிகம்" மற்றது "உத்தரார்சிகம்" என்பதாம். 'அர்ச்சிகம்' என்பதற்குப் பாட்டுக்களின் முதற்தொகுதியெனப் பொருள்படும். 'உத்தராச்சிகம்' என்பதற்குப் பாட்டுக்களின் பிற்றெருபதியெனப் பொருள்படும்.

ஆர்சிகம் என்னும் பகுதியிலே ஆயிரத்து எண்ணூற்றுப் பத்துப் பாடல்கள் உள. இப்பாட்டுக்களிலே, திரும்பத்திரும்ப வருபவைகளையும், இருக்கு வேதப் பாடல்களையும் தெரிந்து நீக்கி விட்டால் இருப்பவை, ஆயிரத்து ஐந்நூற்று நாற்பத்தொன்பது பாட்டுக்கள் தான். இதில் எழுபத்தைந்து பாடல்களைத் தவிர ஏனையவைகள் இருக்கு வேதத்தில் இருந்து எடுத்தவைகள். இந்தப் பாட்டுக்களின் யாப்பு முறையைப் "பிரகதா" எனப்பெயரிட்டு அழைப்பர். இப்பாட்டுக்கள் ஓசை நயம் மிக்கனவாகவும், வேள்விகள் பயன்படுவனவாகவும் விளங்குகின்றன.

சாம வேதம் முழுவதுமே பாட்டுக்களின் துணைக்கருவியாகப் பயன்படுத்தப்படுவனவாகும். இந்த இசையே முக்கியம்; இவ்வேதத்தின் இரு பகுதியும் இசையை வளர்ப்பதே நோக்கமாகக் கொண்டமைந்தவை, இவ்வேதங்களை ஓத உரிமையுடையவன் ''உக்கதா'' எனப்படுவான். ஓசையறிவைப் பெறுவதற்கு அடிப்படையாக அமைவது "ஆச்சிகம்' எனும் பகுதியே. இப்பகுதியை மனனம் செய்த பின்பே 'உத்தராச்சியத்தைப்' பயன்படுத்துவர்.

சாம வேதந்தில் வழங்கப்படும் தனிப்பாடல்கள் இராகம், இசை என்பவற்றைப் பற்றிக் குறிப்பனவாகும், இதற்கு இருக்கு வேதமே ''யோநி'' எனப்படும். யோநி என்பதற்குக் கருவென்றும், ஆரம்பிக்கும் இடம் அல்லது தோற்றும் இடம் என்றும் பொருள் உண்டு. ஆர்ச்சிகத்தில் உள்ள ஐந்நூற்று எண்பத்தைந்து பாடல்களும் யோநிகள் எனப் பெயர் பெறுவன.

உத்தரார்சிகத்தில் நாநூறு பாடல்கள் உண்டு. அவை ஒவ்வொன்றிற்கும் மூன்று மூன்று பாடற் தொகுதிகள் காணப் படுகின்றன. பல பாடல்கள் வேள்விகள் பற்றியும், அவ்வேள்விகளில் இடம்பெறும் தோத்திரங்களைப் பற்றியும், சில பாடல்கள் மிகப் பழைய காலத்தில் இடம்பெற்ற இசைபற்றியும் எடுத்தியம்புகின்றன. இந்திரன், அக்கினி, சோமன் முதலிய தெய்வங்கள் மீது உள்ள பாடல்கள் ஒன்றன்பின் ஒன்ருக வருவதைக் காணலாம்.

சாம வேத கானங்கள் இருவகையாக விரிக்கப்படும். அவை 'கிராமகேய கானம்'. ''ஆரண்ய கானம்'' என்பன. ஆரண்ய கானம் மிகப்பயங்கரமானது. அதனல் இதனைக் கிராமத்தில் ஓத அல்லது இசைக்க முடியாது. எனவே இதனைக் காட்டிறகுச் சென்று இசைத்தார்கள். "கிராமகேயகானம்" மேலும் இரு உபபிரிவுகளைக் கொண்டது. இவற்றை 'ஊஹ கானம்', என்றும் 'உஹ்ரகானம்' என்றும் கூறுவர். இவை யாகங்களிற் பயன்படுவன. இச்சாம வேத இராகங்கள் பிற் காலத்தில் 'கல்ப சூத்திரங்கள்' எனப்பட்டன. இந்திய இசைக் கலையின் உன்னத வளர்ச்சிக்குச் சாம வேதமே காரணமாகியது.

அதர்வண வேதம்

வேதங்களிலே நான்காவதாகக் கூறப்படும் அதர்வவேதம் ஏனைய இருக்கு, இயசூர், சாமம் என்பவற்றுடன் வேறு பாடுடையதாகக் காணப்படுகிறது " அதர்வன்'' என்றசொல் மாந்திரீக அறிவு' எனப் பொருள்படும், அதர்வண வேதம் ஒன்பது பிரிவுகளையுடையது எனக் கூறுவர். இப்பிரிவுகள் சரணங்கள், சாகைகள், பேதங்கள் எனவும் பெயர்பெறும். இவை பைப்பாலதம், தௌடம், மௌடாயனம், சௌநகியம், ஜாஜலம், ஜலதம், பிரமவாதம், தேவதர்சம், சரணவைதம் என்பவையாகும். இவற்றுள் ஒன்றேனும் முழுமையாகக் கிடைப்பது அரிது. சில பகுதிகளைத் தொகுத்து காஷ்மீரத்திலும், காசியிலும் உள்ளோர் சிலர் கற்றுக்கொண்டார்கள் என கூறப்படுகின்றது. தென்னாட்டில் இவ்வேதத்தை கற்றோர் இல்லையென்றே அறிந்தோர் உரைப்பர். இந்த ஒன்பது பிரிவுகளுள் இரண்டு பிரிவுகளே இன்று பிரசித்தி பெற்றன எனப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் வடமொழி இலக்கிய வரலாற்றிலே குறிப்பிடுகின்றார். அவை சௌநகிய சாகை பைப்பலாத சாகை என்பன.

சௌநகிய சாகையைச் சார்ந்த அதர்வண வேதமே இன்று நமக்குக் கிடைத்துள்ளது. இப்பிரிவு எழுநூற்று முப்பத்தொரு செய்யுட் பகுதிகளும் ஆறுயிரம் சூக்தங்களும் கொண்டமைந்துள்ளது. இவ்வேதம் இருபது காண்டங்களைக் கொண்டு விளங்குகிறது. இருபது காண்டங்களிலும் ஏழில் ஒரு பகுதியியே அதர்வண வேதத்தில் உள்ளது. மற்றவையெல்லாம் யசூர்வேதம், இருக்கு வேதம் என்பவற்றிற்கூறப்

பட்டவையாகும். முதலாம் காண்டம் தொடக்கம் பதினெட்டாம் காண்டம் வரை திட்டமிட்ட ஒழுங்கு முறையில் அமைந்த செய்யுட் தொகுதிகளைக் காணலாம். பதினைந்தாம் பதினாறும் காண்டங்கள் பெரும்பாலும் வசனத்திலே அமைந்தனவே. எட்டாம் பன்னிரண்டாம் காண்டங்கள் மாந்திரீகம், வைத்தியம் போன்ற பலவிடயங்களையும் விளக்குவனவாகும். பதின்மூன்றும் காண்டம் தொடக்கம் பதினெட்டாம் காண்டம்வரையுள்ள பகுதிகளிற் தெய்வங்களின் தோத்திரப்பாடல்கள் காணப்படுகின்றன. பதினான்காம் காண்டம் விவாக மந்திரங்களை விரித்துக் கூறுகிறது. பதினெட்டாவது சூக்தத்திலே ஈமக்கிரியைக்கான மந்திரங்கள் இடம்பெற்றுள்ளன.

அதர்வ வேத சூக்தங்களை (பாடல்களை) அவை கூறும் விடயங்களின் தன்மை கொண்டும் வகுத்துக்காட்டலாம். நோய்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை "பைஷஜ்யானி' சூக்தானியில் விளக்கப்படுகின்றது நீண்ட வாழ்வு வாழ்வதற்கான பாடல்களை "ஆயுஷ்யானி" என அழைக்கப்படுகின்றது தொழில் மூலம் விளையும் நன்மைகளைப்பற்றி "பௌஷ்டிகானி சூக்தங்கள் விளக்குகின்றன. யாவங்கள் நீங்குவதற்கான கிரியை முறைகளை ''பிராயச்சித்தானி'' சூக்தங்கள் கூறுகின்றன. குடும்பத்திலே ஒற்றுமை, பெண்ணின் நன்மை என்பவற்றை "ஸ்தீரிகர்மானி" சூக்தங்கள் கூறுகின்றன. அபரக்கிரியை அரசகர்மம்பற்றிய செய்திகளை ''ராஜகர்மனி" என்ற சூக்தம் எடுத்தியம்புகின்றது. 'குந்தாப' சூக்தத்திலே சமயம் தத்துவம் போன்ற அம்சங்கள் போற்றப்படுகின்றன.

''இமய சூக்தம்''என்ற பகுதியும் உண்டு. இங்கு பிதிர்கருமம், பிரேதகருமம் ஆகியன பேசப்படுகின்றன. அதர்வ வேதத்தில் தத்துவக் கருத்துக்கள் மலிந்து காணப்படும் சூக்தங்கள் சில உள, அவை பிற்காலத்தவை. இவை பிரபஞ்ச உற்பத்தியைக் கூறுகின்றன. மந்திரங்களை உச்சரிப்பவர்களுக்கு மாந்திரீக சக்தியை வளரச் செய்வன. இவை எண்ணிய கருமங்களை ஆற்றப் பயன்பட்டன. உபநிடதங்களிற் கூறப்படும் பிரஜாபதி இங்கும் உலகத்தை ஆக்கவும், அழிக்கவும் வல்லவன் என விளக்கப்பட்டுள்ளான். தத்துவக் கருத்

துக்களைச் சுட்டும் பசட்டிக்களின் சொற்களும் இங்குள்ளன. அவை தபஸ், மனஸ, பிரம்மம், பரம் சத்து, அசத்து என்பன இவை அதர்வ வேதத்தின் வளர்ச்சியைக் காட்டுகின்றன.

இருக்கு வேதம்போன்று அதர்வ வேதத்தில் உவமைச் சொற்ரெடர்கள் வினையுருவங்கள் ஆகியன தொடர்ந்துள்ளன. அதர்வன வேத சூக்தங்களில் இயற்கைத் தன்மை, கற்பனை வளம் ஆகியன காணப்படவில்லை. மனிதனின் அன்ருட வாழ்க்கையிலே ஏற்படும் நோய்கள், கஷ்டங்கள், அல்லல்கள் முதலியவற்றை நீக்குவதற்கான மாந்திரீக விதிகளாகவே அவை அமைகின்றன.

மூன்று வேதங்களிலும் ஒரு தொடர்பு உண்டு. அதர்வ வேதம் தனித்து இயங்கியது. இருக்கு, யசூர், சாமம் எனப் பெயர் பெற்றமைக்குரிய காரணங்கள் என்ன என்பதுபற்றி முன்னர் கூறப்பட்டுள்ளன. அதர்வ வேதம் இயற்றிய ரிஷிகளின் பெயரைக் கொண்டே அது அழைக்கப்பட்டது. "அதர் வாங்கிறஸ், பிருகுவாங்கிறஸ்" என்னும் பெயரைக் குறிப்பிடலாம். யாகம், ஓமம் என்பவற்றுக்கு அக்கினி முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த அக்கினிக்கிரியைகளில் அக்கினி வளர்ப்பவர்கள் புரோகிதர்கள். இப்புரோசிதர்கள் இருவகைப்படுவர். இவர்கள் "அதர்வாக்கள்" எனவும் "அங்கிரசர்கள்" எனவும் அழைக்கப்புடுவர், இந்த இருவகைப் புரோகிதர்களும் அதர்வ வேதத்திேைடு தொடர்புடையவர்களாக காணப்படுகின்றனர். "பிருகு', பரம்பரையைச் சார்ந்த புரோகிதர்களும், இதில் முக்கியத்துவம் பெறுவதால் இவ்வேதத்திற்கு பிருகுவாங்கிறஸ் என்றும், அதர்வாங்கிறஸ் என்றும் பெயர்கள் வழங்கலாயின. பின்பு அதர்வாங்கிறஸ் என்ற பெயரே வழங்கி வருவதாயிற்று இது நாளடைவில் அர்வம் என குறுகி வழங்கலாயிற்று. பின் அதர்வன வேதம் எனப்பட்டது. பிற்காலத்தில் இது நால்வேதங்களின் ஒன்று என முக்கியத்துவம் பெற்றுள்ளது, மேலும் வேதங்களில் இடம்பெற்ற தெய்வங்களும் அதற்கான ஸ்துதிகளும் இவ்வேதத்தில் காணப்பட்டமையால் நான்காவது என்ற அந்தஸ்தைப் பெற்று இருக்கலாம்,

மூன்று வேதங்களும் தெய்வங்களையும் வழிபாடுகளையும் சிறப்பித்துக்கூற அதர்வண வேதமோ அத்தெய்வங்களைத் தம் வசப்படுத்தியுள்ளது. மாந்திரீகம், நோய், இருவரை ஒன்று சேர்த்தல், சேர்ந்திருந்த இருவரை வேருகப் பிரித்தல் ஆகிய விடயங்கள் பற்றி அதர்வண வேதம் இயம்புறது.

இந்நூலாக்க உதவிய நூல்கள்:

வடமொழி இலக்கிய வரலாறு	பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்
வடமொழி நூல்வரலாறு	பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி
சமஸ்கிருத இலக்கியச்சிந்தனை	பேராசிரியர் வி. சிவசாமி
அதர்வவேதம் மொழிபெயர்ப்பு	ஜம்புநாதன்
இந்தியவரலாறு	
ஸ்ரீருத்திரம்	"அறிஞர் அண்ணு"
வியத்தகு இந்தியா	ஏ. எல். பசாம்
இந்திய தத்துவ ஞானம்	இலச்சுமண ஐயர்
இந்திய சமயத்தத்துவம்	பி.எஸ். மகாதேவன்
சைவசித்தாந்தம	இராமனுச்சாரி
சைவசித்தாந்தம்	முத்துராமன்
சைவசித்தாந்தம்	ரா. முருகவேள்
வேதாந்தத்தெளிவாம்	
சைவசித்தாந்தம்	இளயதம்பி சுப்பிரமணியம்

நெல்லண்டையான் வெளியீட்டார் பகர்வது!

மனிதப் பிறப்பு புனிதப் பிறப்பு அரிதாகிய பிறப்பெடுத்த மனிதன் வாழ்க்கையை சிறப்பிக்கப் பல கடமைகளைச் செய்கின்றன். கடமை என்பது சிறந்த அறமாகும். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஒவ்வொரு பருவநிலையிலேயும் பல அறங்களை ஆற்ற வேண்டும். இதனை ''நல்லறம்'' என்பர்.

இவ்வகையில் "நல்லறம்" என்ற தலைப்பில் வடமொழி இலக்கியங்களிலே உள்ள அறக்கருத்துக்களையும், தமிழ் மொழி இலக்கியங்களிலே கூறப்பட்ட அறக் கருத்துக்களையும் விளக்கும்வகையில் அமைந்த தொகுப்புக் கட்டுரைகளை அடக்கிய இனிய, எளிய தமிழ்நடையில் விளக்கும் அரிய நூல் ஒன்று அச்சுவானம் ஏற்பட்டுள்ளது.

மனித வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த அறக்கருத்துக்களை இலக்கிய ரசனையுடன் புரிந்து பயன் பெறத்தக்க அருமையான நூல். இந்நூல் ஆசிரியர் சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B.A. அவர்கள் இவரின் நூல் வரிசையில் ஆருவதாக இந்நூல் எமது வெளியீடாக அமைகின்றது என்பதில் பெருமையடைகின்ரேம்.

இங்ஙனம்
நெல்லண்டையான் வெளியீட்டுச் செயலாளர்
இராமக்கண்ணு
1992.

ஸ்டான்கார்ட் பிரிண்டர்ஸ் லிமிட்டெட், கொழும்பு–11.